விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2040 மார்கழி 08 புதன்கிழமை (23.12.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 04




# முடிவுகள் எதுவுமின்றி நிறைவுபெறும் தமிழ்க் கூட்டமைப்பின் கூட்டங்கள்!

## மீண்டும் 4ஆம் திகதி கூடி முடிவெடுக்கும்?

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளு மன்ற உறுப்பினர்கள் நேற்று கூடி ஆராய்ந்த போதி லும் எவ்வித முடிவுகளும் எடுக்கப்படாத நிலையில் நிறைவு பெற்றது. இது தொடர்பில் எதிர்வரும் 4ஆம் திகதி மீண்டும் கூடி ஆராயவுள்ளதாக கூட்டமைப்பு வட் டாரங்கள் தெரிவித்தன. (16ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை அரசை ஐ.நா.சபை விசாரணைக்கு அழைக்கவில்லை

### மங்கள சமரவீர சொல்கிறார்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் தோல்வி குறித்த அச்சத்தின் காரணமாக இலங்கை அரசாங் கம் எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகா மீது சேறுபூசும் விதத்தில் பொய் பிரசாரங்களை மேற் கொண்டு வருவதாக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவின் தலைவர் மங்கள சமரவீர தெரிவித் துள்ளார்.

இதன் ஒரு (16ஆம் பக்கம் பார்க்க)

## நம்பியாரிடம் விளக்கம் கோராமல் ஐக்கிய நாடுகள் சபை இருப்பது ஏன்?

### கேள்வி எழுப்புகிறது இன்னசிற்றிபிறஸ்

(கொழும்பு)

வன்னிப் பகுதியில் இடம்பெற்ற இறுதி நேர யுத்தத்தின் போது சரணடைய வந்த விடு தலைப்புலிகளின் தலைவர்கள் கொல்லப்பட் டமை குறித்து ஐக்கிய நாடுகள் சபை இலங்கை அரசாங்கத்திடம் விரிவான விளக்கத்தினைக் கோரியுள்ள அதேசமயம் இறுதி யுத்தத்தின் போது விடுதலைப் புலிகளின் தலைவர்கள் தாம் சரணடையப் போவதாக அறிவித்தும் அது பற்றிய எந்தவித நடவடிக்கையும் எடுக் காமல் இருந்த ஐக்கிய நாடுகள் சபையின் விசேட பிரதிநிதி விஜய் நம்பியாரிடம் விளக் கம் கோராமல் இருப்பது ஏன்? என இன்ன சிற்றி பிறஸ் கேள்வியெழுப்பியுள்ளது.

இறுதிக்கால யுத்தத்தின் போது ஐக்கிய நாடு கள் சபையின் சிறப்புப் பிரதிநிதியாக இலங் கைக்கு வந்த (16ஆம் பக்கம் பார்க்க)

## நடந்தது என்ன? ஜனாதிபதி விளக்கம்

(கொழும்பு)

சரணடைந்த விடுதலைப் புலிகளின் தலை வர்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத் தபாயவின் உத்தரவின் பேரில் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டார்கள் என்று முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா தெரிவித்த குற்றச்சாட்டு தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இன்று புதன்கிழமை நாட்டு மக் களுக்கு (16ஆம் பக்கம் பார்க்க)

## மீண்டும் அரசியல் களத்தில் சந்திரிகா; அடுத்தமாதம் மகனையும் இறக்குகிறார்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமார துங்க அரசியலில் மீண்டும் பிரவேசிக்கிறார். அவரது தகப்பனார் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவின் பிறந்த நாளான அடுத்த மாதம் 8ஆம் திகதி அவர் அரசியலில் பிரவேசிக் கிறார்.

அன்றைய தினம் அத்தலங்கவில் உள்ள தனது இல்லத்தில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி யிலிருந்து மகிந்த ராஜபக்ஷவினால் ஓரம் கட் டப்பட்ட கட்சி முக்கியஸ்தர்கள் மற்றும் உறுப் பினர்களை சந்திக்கவுள்ள சந்திரிகா குமார துங்க எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளர் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவாக பிரசாரத்தில் ஈடு படுவதன் ஊடாக (16ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் 7 இலட்சம் பேர் வாக்களிக்கத் தகுதி

### யாழ்.தெரிவத்தாட்சி அலுவலர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.தேர்தல் மாவட்டத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டத்தில் எதிர்வரும் ஜனா திபதித் தேர்தலில் 7 இலட்சத்து 21 ஆயிரத்து 359 வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு தகுதி பெற்றுள்ளனர் என யாழ். தெரிவத்தாட்சி அலு வலர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

இத்தொகை மதிப்பீடு 2008 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பின் அடிப்படையில் எடுக் கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் யாழ்.மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் (16ஆம் பக்கம் பார்க்க)

## காணாமல் போயிருந்த இளைஞன் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

அளவெட்டிப்பகுதியில் உள்ள பாழடைந்த கிணறு ஒன்றிலிருந்து இளைஞர் ஒருவர் சட லமாக மீட்கப்பட்டார். கடந்த 4 நாட்களுக்கு முன் னர் காணாமல் போயிருந்த இவர் நேற்று அளவெட்டி பினாக்கைப்பகுதியில் உள்ள பாழடைந்த கிணறு ஒன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தையிட்டி வள்ளுவர் புரத்தை பூர்வீகமாக கொண்ட (16ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளை வெள்ளைக் கொடியுடன் சரணடைய கோஹனவே கூறினார்!

### கொழும்பு ஊடகம் ஒன்று தகவல்

(கொழும்பு)

வெள்ளைக் கொடிகளுடன் சரணடையு மாறு முன்னாள் வெளிவிவகார அமைச்சக செயலாளர் பாலித கோஹனவே விடுத லைப்புலிகளின் அரசியல் பிரிவுத் தலை வர்களிடம் தெரிவித்தவர் என கொழும்பு ஊட கம் ஒன்று தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அது மேலும் தெரிவித் துள் ளதாவது, போர் இறுதிக்கட்டத்தை அடைந்த சமயம் பாலித கோஹன இலங்கையின் வெளி விவகார அமைச்சின் செயலாளராக பணி யாற்றியிருந்தார்.

விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுத் தலைவர் பா.நடேசன், சமாதான செயலகப் பணிப்பாளர் சீ.புலித்தேவன், கட்டளைத் தள பதி ரமேஸ் ஆகியோர் சரணடைய விரும் பியபோது (16ஆம் பக்கம் பார்க்க)



**Universal com.**

Ticketing/Phone Shop/Net Cafe

★ NOKIA
★ SONY ERICSSON
★ Moto
★ LG
★ PLPN

யாழ் → கொழும்பு → யாழ்
பஸ் Ticket

சகல நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டு

Universal com.
107, Kandy Road,
Chavakachcheri
T.P.: (+94) 021 7451595
Hot Line: 0777627351

Magic Box

- 32 சன்னெல் பொல்ய்ப்ஹொனக்ரிங் டொன்ஸ்
- FM ரேடியோ ஸ்டீரியோ ஹெட் செட்டுடன்
- 200 போன்புக் பதிவுகளையும்
- விரிவான SMS செயற்பாடு
- ஸ்பீக்கர் போன்
- மேன்மையான தெளிவான பேச்சை கேட்பதற்கு கிரிஸ்டல் டோக்
- லாந்தர் (விளக்கு)
- நீண்ட காலம் நீடிக்கக்கூடிய பற்றரி
- W160 Hutch Sim Card கதைப்ப தற்கு 900 நிமிடம் இலவசம்

3600/=




நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஆட்சி மாற்றத்திற்கான அவசியத்தை தமிழர்கள் புரிந்துகொள்ள வேண்டும்

## ஆதரவளிக்கும்படி மனோ கணேசன் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் ஆட்சி மாற்றத்திற்கான அவசியத்தை புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் புரிந்துகொண்டு எமது அரசியல் நடவடிக்கைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கிட வேண்டும்.

எமது கருத்துகளை உலகம் முழுக்க பரந்துவாழும் புலம்பெயர் தமிழ் சமூ கத்தின் மத்தியில் கொண்டு செல்லும் பணியை தமிழ், ஆங்கிலம் உள்ளிட்ட உள்ளூர் மொழிகளில் செயற்படும் புலம்பெயர்ந்த தமிழர் ஊடகங்கள் முன்னெடுக்க வேண்டும் என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் எம்பி தெரிவித்துள்ளார். புலம் பெயர்ந்த தமிழர்களை விளித்து விடுத்துள்ள அழைப்பில் மனோ கணேசன் எம்.பி மேலும் தெரிவித்துள்ளதாவது,

தமிழ் மக்களின் பாரம்பரிய மண் பறிபோய்க் கொண்டிருக்கின்றது. உள்நாட்டிலும், வெளிநாட்டிற்கும் தமிழர்களின் இலட்சக் கணக்கான புலம் பெயர்வுகளினால் தமிழர்களின் அரசியல் பலம் வேகமாக குறைந்து வருகிறது.

உதாரணமாக யாழ்.மாவட்டத்தில் இன்று 7இலட்சத்து 25ஆயிரம் தமிழ் வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளார்கள். ஆனால் உண்மையில் இந்த தொகையினர் அங்கே வாழவில்லை.

இன்று யாழ்.மாவட்டத்திலிருந்து ஒன்பது நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படும் நிலைமை தற்போதைய தேர்தல் பதிவுகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆனால் விரைவில் நடைபெறும் சனத்தொகை கணக்கெடுப்பிற்கும் வாக்காளர் பதிவிற்கும் பிறகு யாழ்.மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்படும் நாடாளுமன்ற உறுப்பினர் தொகை குறைவதற்கான சாத்தியம் இருக்கின்றது.

இத்தகைய நிலைமை வடகிழக்கின் ஐந்து தேர்தல் மாவட்டங்களிலும் இருக்கின்றது. இவைபற்றி யார் சிந்திக்கின்றார்கள்? இன்றைய நிலைமையிலும் வறட்டுவாதம் பேசி ஆட்சி மாற்றத்திற்கு குந்தகம் விளைவிக்க எண்ணுபவர்களிடம் இதற்கான பதில் இருக்கின்றதா?

ஆட்சி மாற்றம் நடைபெறவேண்டும். ஜனநாயக சூழல் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அதையடுத்து புலம் பெயர்ந்து சென்றுள்ள தமிழர்களில் சாத்தியமானோர் நாடு திரும்பவேண்டும்.

வெளிநாடுகளிலே நிரந்தரமாக குடியுரிமை பெற்றுள்ளவர்களும் தாய்நாட்டிற்கு வருகை தந்து இரட்டை குடியுரிமை அடிப்படையில் தமது இலங்கை குடியுரிமையை உறுதிப்படுத்தவேண்டும்.

புலம் பெயர் தமிழர்கள் தமது வர்த்தக முதலீடுகளை இலங்கையில் குறிப்பாக வடகிழக்கில் செய்திட வேண்டும். இந்நடவடிக்கைகள் தமிழர்களின் இருப்பை இலங்கையில் உறுதிப்படுத்தும். எனவே இவற்றுக்கு ஏதுவான அரசியல் சூழல் உருவாக வேண்டும்.

அதுதான் ஆட்சி மாற்றம். அதற்கான ஒரே வழிதான் சரத் பொன்சேகா என்றுள்ளது. (சு)

## சிவத்தமிழ்ச் செல்வி அறக்கொடை நிதி வழங்கல்

(யாழ்ப்பாணம்)

சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு அறக்கொடை நிதி வழங்கப்படவுள்ளது. இவ் அறக்கொடை நிதி யாழ்.போதனா வைத்தியசாலையின் சத்திர சிகிச்சைப் பிரிவுக்கு ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்படவுள்ளது. இவ் நிதி வைத்திய நிபுணர் டாக்டர் ரவிராஜிடம் கையளிக்கப்படும்.

சிவத்தமிழ் கல்வி நிதியம் வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து தற்போது மீள் குடியேறியுள்ள மாணவர்களில் வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளில் கல்வி கற்கும் 2010 க.பொ.த(சா/த) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு நிதியுதவி வழங்கப்படவுள்ளது. (ச-3)

## கோப்பாய் பாலம் சேதம்

கைதடி-கோப்பாய் வீதியில் அமைந்துள்ள பாலம் உடைந்துள்ளதால் அவ்வீதியூடான போக்குவரத்து நேற்று முதல் தடைப்பட்டுள்ளது. கைதடி-கோப்பாய் வீதியிலுள்ள பாலம் திருத்தும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. இதனால் தற்காலிக வீதியொன்று அருகில் அமைக்கப்பட்டுள்ளது.

அவ்வீதி நேற்று முன்தினம் இரவு பெய்தகடும் மழையினால் சேதமடைந்துள்ளது. இதனையடுத்து அவ்வீதியூடான வாகனப் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. மோட்டார் சைக்கிள் மற்றும் சைக்கிள் என்பனவே அவ் வீதியூடாக பயணம் செய்கின்றன. (சு)

# நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை இருந்தால் நாடாளுமன்றம் செல்லாக்காசு!

## ஜனாதிபதி வேட்பாளர் இல்யாஸ் தெரிவிப்பு

நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி ஆட்சி முறை இருக்கும் வரை நாடாளுமன்றம் செல்லாக்காசாகவே அமையும் என ஜனாதிபதி சுயேச்சை வேட்பாளர் டாக்டர் ஐ.எம்.இல்யாஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு வருமாறு,


தற்போது அமுலிலுள்ள 1978ஆம் ஆண்டின் அரசியலமைப்புக்கிணங்க நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி இந்த நாட்டின் தேர்ந்தெடுக்கப்படும் போது மன்னராக கருதப்படுகின்றார்.

சிறுபான்மை இனங்களின் கடந்த கால ஜனநாயகப் போராட்டங்களும் உரிமைகளும் நாடாளுமன்ற பிரதிநிதித்துவங்களும் செல்லாக்காசாக மாற்றியமைக்கும் இந்த சர்வாதிகார தனிநபர் ஆட்சி முறையே காரணமாகும்.

மாகாண சபைகளிலோ அல்லது நாடாளுமன்றத்திலோ அர்த்தமற்ற அரசியலுக்கான ஆசனங்களைப் பெறுவதற்குரிய தேர்தல்களை விடவும் சிறுபான்மை சமூகங்களது குரலை ஓங்கி ஒலிக்கச் செய்யும் அரியதொரு சந்தர்ப்பமாக நாம் இதை கொள்ள வேண்டும்.

தமிழ், முஸ்லிம், மலையக மக்கள் முண்டியடித்துக் கொண்டு சோரம் போகும் சிறுபான்மை அரசியலை நிராகரித்து யுத்தத்தை மாத்திரமே சந்தைப்படுத்தும் போரின அரசியலுக்கெதிராக நாம் அணி திரள வேண்டும்.

நாம் இத் தேர்தலில் யாரை வெல்ல வைப்பது என்று சிந்திக்காமல் யாரை தோற்கடிக்க வேண்டும் என்றே சிந்திக்க வேண்டும் என்றுள்ளது. (சு)



வெள்ளம் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள மணற்காடு பகுதி மக்களைச் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் அண்மையில் நேரில் சென்று பார்வையிட்டார். அதனையே படத்தில் காண்கிறீர்கள்.

அண்மைக்கால இயற்கை அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள இம் மக்கள் பல்வேறு பொது இடங்களில் தற்காலிகமாக தங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வெளிநாடுகளிலிருந்து வருவோர் ஒருமாதத்துக்கு பதிய வேண்டியதில்லை

கிறிஸ்மஸ் பண்டிகைக்காக வெளிநாடுகளிலிருந்து தமது உறவினர்களைப் பார்ப்பதற்கு நாட்டிற்கு வந்து ஒருமாத காலம் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்கள் பொலிஸ் நிலையங்களில் தம்மைப் பதிவு செய்து கொள்வது அவசியமில்லையென பொலிஸ்மா அதிபரினால் சகல பொலிஸ் அதிகாரிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் மா அதிபரினால் விடுக்கப்பட்டுள்ள இந்த உத்தரவு நேற்று முன்தினம் முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அவர்கள் நேற்று முன்தினம் திங்கட் கிழமை முதல் ஒரு மாத காலத்துக்கு மேல் நாட்டில் தங்கியிருப்பார்களானால் மட்டும் பதிவு செய்து கொள்ளப்பட வேண்டுமென பொலிஸ் மா அதிபரினால் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-3)

# 50 பஸ்களை பெற்றுத்தர அரச அதிபரிடம் கோரிக்கை

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் யாழ்ப்பாண டிப்போக்களுக்கு 50பஸ்கள் மேலதிகமாகத் தேவைப்படுவதாகவும் அதனை பெற்றுத் தருமாறும் தம்மிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக யாழ்.அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில், ஏ-9 பாதையூடான போக்குவரத்து இடம் பெறுவதால் உள்ளூர் மற்றும் வெளிமாவட்டங்களுக்கு சேவையிலீடுபட வடபிராந்திய போக்குவரத்து சபையின் யாழ்.மாவட்ட டிப்போக்களுக்கு 50 பஸ்கள் மேலதிகமாகத் தேவைப்படுவதாகவும் அவற்றை பெற்றுத்தருமாறும் தம்மிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு நாம் அறிவித்துள்ளோம் என யாழ். அரச அதிபர் க.கணேஷ் குறிப்பிட்டார். (ச-5)


**கண்ணீர் அஞ்சலி**



எமது பாடசாலையில் கற்பிக்கும்
திருமதி
இந்திராணி பொன்னையா
ஆசிரியை அவர்களின் பாசமிகு
தந்தையார்

**தியாகராசா கந்தையா**

அவர்கள் 19.12.2009 அன்று இறைபதம் அடைந்ததையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நல்லுறவு மன்றம்
யாழ்/செங்குந்த இந்துக் கல்லூரி
(C-4026)



**யாவரும் எதிர்பார்க்காத அதிரடி மலிவு விற்பனை**

50 வருட பூர்த்தியை முன்னிட்டு 20%-40%வரையான விசேட கழிவு

எங்களிடம் எல்லாவிதமான அப்பியாசக் கொப்பிகள், பாடப் புத்தகங்கள், பாடசாலை உபகரணங்கள், சிறுவர்களுக்கான நாலுறூள், இரட்டை றூள் கொப்பிகள் (160,80 பக்கங்களில்) மற்றும் எழுது கருவிகள் அனைத்தையும் ஒரே கூரையின் கீழ் தெரிவு செய்து குறைந்த விலையில் தரமான பொருட்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

தரங்குறைந்த கொப்பிகளை வாங்கி சிறுவர்களின் தரத்தைக் குறைக்காதீர்கள்

2500/- பெறுமதிக்கு அதிகமாகக் கொள்வனவு செய்பவர்களுக்கு அழகிய My Clear Bag (Rexion) இலவசமாக வழங்கப்படும்.

சனி ஞாயிறு தினங்களில் முழுமையாக எமது நிறுவன வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றும் என்பதனை அறியத்தருகின்றோம்.

**ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**

212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(C-3886)



**புதிய வகுப்பு**

அந்தண மாணவர்கள், குருமாருக்கான அக்னிகார்ய விளக்கம் புதிய வகுப்புகள் ஆரம்பம். இன்று 23/12/09 புதன்கிழமை மாலை 6.00-7.00 மணி வரை நடைபெறும்.

ஆசிரியர்:சிவஸ்ரீ ப.ராஜகோபாலசர்மா,
சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்,
குருகுலம்,ஆனைப்பந்தி.
(C-4025)

# இன்று ஒரு தகவல்

## இரண்டுங் கெட்டான் நிலை

ஆசிரியர் ஒருவர் பாடம் நடத்தி முடித்தவுடன் "மாணவர்களே... இதுவரைக்கும் நான் நடத்திய பாடத்தில் உங்களுக்கு ஏதாவது சந்தேகம் இருக்கிறதா?" என்று கேட்டார்.

ஒரு மாணவன் எழுந்து "சேர் எனக்குச் சந்தேகம் எதுவுமில்லை" என்றான்.

"ஏன்?" என்று கேட்டார். "நீங்கள் நடத்திய பாடம் தெளிவாகப் புரிந்து விட்டது. அதனால் சந்தேகம் வரவில்லை" என்றான்.

இன்னொரு மாணவன் எழுந்து,

"சேர் எனக்கு சந்தேகம் வரவில்லை" என்றான்.

"ஏன்?" என்று கேட்டார்.

நீங்கள் நடத்திய பாடம் எதுவும் புரியவில்லை" என்றான்.

இந்த இடத்தில் நாம் ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த உலகத்தில் எல்லாம் புரிந்த ஒருவனுக்கும் சந்தேகம் வராது.

எதுவுமே புரியாத ஒருவனுக்கும் சந்தேகம் வராது.

அரைகுறையாகப் புரிந்து கொண்டவனுக்குத்தான் அடிக்கடி சந்தேகம் வரும். ஆக... மாணவர்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

அதே மாதிரித்தான் மனிதர்களையும் மூன்று வகையாகப் பிரிக்கிறார்கள் ஆன்மீகவாதிகள்.

ஓர் ஆன்மீகப் பெரியவர் என்ன சொல்கிறார் தெரியுமா?.

இந்த உலகத்தில் மூன்று வகையான மனிதர்கள் இருக்கிறார்களாம். முதல் வகையினர் எப்படி தெரியுமா?

இவர்களுக்கு எதையும் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற அவசியமே கிடையாது. ஏனென்றால் இவர்களுக்கு எல்லாமும் தெரியும்.

இவர்கள் ஞானத்தின் முழு வடிவாக இருக்கும் காரணத்தால் இவர்களுக்கு எந்த சந்தேகமும் இல்லை. எந்தக் கேள்விகளும் கிடையாது.

இந்த நிலையில் இருப்பவன் கிருஷ்ணன். எல்லாவற்றுக்கும் விடை தெரிந்து கொண்ட நிலையில் அவனே விடையாக மாறிவிட்டான்.

இரண்டாவது நிலையில் இருப்பவன் அர்ச்சுனன். இவனுக்கு எப்பொழுது பார்த்தாலும் கேள்வி தான். சந்தேகம் தான். பதில் சொல்லச் சொல்ல அவனுக்கிருக்கும் சந்தேகம் அதிகமாகிக் கொண்டே இருக்கும். குறையவே குறையாது.

அர்ச்சுனன் போல் உள்ளவர்கள் எப்பொழுதும் கேள்வி கேட்டுக் கொண்டேயிருப்பார்கள்.

ஒரு கேள்விக்கு விடை கிடைத்து விட்டது என்று வைத்துக் கொள்ளுங்கள். உடனே அவர்களிடமிருந்து இன்னொரு கேள்வி வரும்.

கிருஷ்ணருடைய நிலை எப்படியென்றால் அது கேள்விகளே அற்றநிலை. அர்ச்சுனனுடைய நிலை எப்படி யென்றால் அது கேள்விகளைத் தவிர வேறு எதுவும் அற்ற ஒரு நிலை.

இவர்களைத் தவிர இன்னொரு ஆள் இருக்கிறான். அவனுக்கும் கேள்விகள் அற்ற ஒரு நிலைதான். அவன் துரியோதனன்.

எதையும் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணமே இவனுக்குக் கிடையாது. ஆவலே இல்லை என்பதால் அதைப் புரிந்து கொள்ள வேண்டும் என்ற அவசியமும் இல்லை.

அதனால் அவனும் கேள்விகள் அற்ற ஒரு நிலையில் தான் இருக்கிறான்.

எல்லாப் பதிலும் தெரிந்து கொண்ட நிலையில் கிருஷ்ணனும் கேள்விகள் அற்ற நிலையில் இருக்கிறான்.

தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவலே இல்லாத துரியோதனனும் கேள்விகளற்ற நிலையில் இருக்கிறான்.

இப்படியும் இல்லாமல் இரண்டும் கெட்டான் நிலையில் இருக்கிறானே அவன்தான் அர்ச்சுனன். அதனால் பெரியவர்களெல்லாம் என்ன சொல்கிறார்கள் என்றால்...

இந்த உலகத்தில் அர்ச்சுனன்களாக இருப்பவர்கள் ஒன்று துரியோதனன் ஆகிவிட வேண்டும் அல்லது கிருஷ்ணன் ஆகி விடவேண்டும். இதைத் தவிர வேற... வாய்ப்பு இல்லை.

துரியோதனன் மாதிரி உள் ளது விலங்கு நிலை. கிருஷ்ணன் மாதிரி உள்ளது தெய்வநிலை.

அர்ச்சுனனால் விலங்கு நிலையிலும் இருக்க முடியவில்லை... அதே சமயம் தெய்வமாகவும் ஆகிவிட முடியவில்லை.

இப்படி இரண்டும் கெட்டானாக இருக்கும் வரையில் இந்தக் கேள்விகளும் பிரச்சினைகளும் இருந்து கொண்டே இருக்கும். இதுதான் பெரியவர்கள் சொல்லும் அனுபவ உண்மை.

ஓர் ஆசிரியர் விரிவாகவும் விளக்கமாகவும் பாடம் நடத்திய பின்...

'மாணவர்களே! ஏதாவது சந்தேகம் இருந்தால் கேளுங்கள்' என்றார். ஒருமாணவன் எழுந்து,

'சேர்... எனக்கு ஒரு சந்தேகம்' என்றான்.

"என்ன?" என்றார்.

'இதுவரைக்கும் என்ன பாடம் நடத்தினீங்க சேர்?' என்றான் பையன்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# கலைஞர்களிடமிருந்து மக்கள் சிறந்த சேவையை பெற்றிடஇயலும்

## அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்தன

(கொழும்பு)

நாட்டில் வாழும் அனைத்து குடிமக்களும் சுதந்திரமான முறையில் சிந்திக்கும் உரிமையை பெற்றுக் கொள்வதற்கேற்ற யுகத்தினையும் சமூகத்தினையும் உருவாக்குவது கலைஞர்களின் கடப்பாடாகும் என கலாசார மற்றும் தேசிய மரபுரிமைகள் விவகார அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

கொழும்பு ஜோன் டீ சில்வா அரங்கில் 25 ஆவது கலாபூஷணம் விருது வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்ற போது அதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரை நிகழ்த்து கையில்,

சமூக ஒருமைப்பாட்டுக்கும் சமூக மேம்பாட்டுக்கும் கலைஞர்கள் ஆற்றும் பங்களிப்பும் அர்ப்பணிப்பும் மகத்தானவை. அவை அர்த்த புஷ்டியானவை. கலையை உருவாக்குபவர்களும் அதனை வளர்ப்பவர்களும் குறிப்பிட்ட அளவினரே உள்ளனர். அத்தகைய கலைஞர்களிடமிருந்து மக்கள் சிறந்த சேவையை பெற்றுக்கொள்ள இயலும். கலையை தக்கவைக்கவும் அதனை வளரும் சமூகம் மத்தியில் பிரயோகிக்கவும் சுதந்திரமானதோர் சூழ்நிலை அவசியமாகும். கலையாற்றலாம் பிறரை மகிழ் வூட்டும் கலைஞனுக்கு வாழ்க்கையை நடத்திச்செல்வதில் தடங்கல்கள் பிரச்சினைகள் இருப்பின் அக்கலை முழுமை பெறாது. அவன் அடைய நினைத்த இலக்கினை அடைய முடியாது போய்விடும்.

கடந்த காலங்களில் நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலைகள் ஓய்ந்து இப்போது சகல இன சமூகங்களும் சுதந்திரமான முறையில் வாழக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கும் நிலையில் கிடைக்கப் பெறும் நல்ல நல்ல சந்தர்ப்பங்களை கலைஞர்கள் பெற்றுக்கொண்டு தமக்கும் பிறருக்கும் பிரயோசன மிக்கவர்களாக வாழவேண்டும்

கலைஞர்கள் தாம் மட்டும் வளராது அடுத்த தலைமுறைக் கலைஞர்களை உருவாக்கும் விதத்திலும் பணியாற்ற வேண்டும். கலை கலாசாரத்தினை கட்டியெழுப்புவதில் கலைத்துறையினதும் கலைஞர்களினதும் பங்களிப்பு இன்றியமையாததென என்றார்.

(ஓ-4)

# இலங்கையில் அரிசிக்கு தட்டுப்பாடு அரசாங்கத்தின் மீது குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தல் நெருங்கியுள்ள நிலையில் இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் அரிசிக்கு பாரிய தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அரிசியின் விலையிலும் பாரிய அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக நுகர்வோரும் விற்பனையாளர்களும் தெரிவித்துள்ளனர்.

சில வியாபாரத்தளங்களில் ஒருவருக்கு இரண்டு கிலோ அரிசியே வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அரசாங்கத்தின் மீது குற்றச்சாட்டுக்கள் எழுந்துள் ளன.

இதுதொடர்பில் கருத்துரைத்துள்ள அரசாங்கம் இது எதிர்க்கட்சிகளால்திட்டமிட்டு செய்யப்படுகின்ற பிரசாரம் எனத் தெரிவித்துள்ள அதேநேரம் அரிசியை இறக்குமதி செய்யப் போவதாகவும் அறிவித்துள்ளது. எனினும் இலங்கையின் அரிசியாலை உரிமையாளர்களில் முன்னிலை வகிப்பது அரசாங்கத்தின் பலமிக்க அமைச்சரான மைத்திரிபால சிறி சேனாவின் சகோதரராவர். இந்நிலையில் அரசாங்கத்திற்கு அபகீர்த்தியை ஏற்படுத்துவதற்காக எவ்வாறு அரிசித் தட்டுப்பாடு ஏற்பட முடியும் என்ற கேள்வியும் எழுப்பப்பட்டுள்ளது. (ஓ-4)



சாவகச்சேரி லயன்ஸ் கழகமும் தென்மராட்சி கோட்டக் கல்வி அலுவலகமும் இணைந்து தென்மராட்சி வலயத்திற் குட்பட்ட வறிய மாணவர்களுக்கு கண் பரிசோதனை நடத்தி கண்ணாடிகள் வழங்கின. இந்நிகழ்வில் கழக உறுப்பினர்கள் மாணவர்களுக்கு கண்ணாடி வழங்குவதையும் அருகில் கண்வைத்திய அதிகாரி குகதாசன் நிற்பதையும் படத்தில் காணலாம்.

## இராசி பலன்

23-12-2009
(மார்கழி 08 புதன்கிழமை)
சப்தமி முழுவதும்
சதயம் காலை 7.00 மணிவரை
இராகுகாலம் 12.25-1.55மணிவரை
சுபநேரம் 4.55- 6.25மணிவரை
திருவெம்பாவை பூசை ஆரம்பம்
சித்தாமிர்தம்

| | |
|---|---|
| மேடம் | காரிய நன்மை, பெருமையடைதல், விருந்துபசாரம், தேக நலன். |
| இடபம் | அதிக பிரயாசை, ஆரோக்கிய நிலை, உறவினர் சந்திப்பு, சுப செய்தி. |
| மிதுனம் | கட்டுப்பாடு, தொழில் சிந்தை, ரோக நிலை, குடும்பக் கவலை. |
| கடகம் | மனக்கவலை, உடல் நலக் குறைவு, முயற்சி தாமதம், எதிர்பாராத நன்மை. |
| சிங்கம் | மனோதைரியம், உறவினர் வருகை, பொருள் சேர்க்கை, பிரயாண நன்மை. |
| கன்னி | ஜனவசியம், நல்ல முயற்சி, சத்துருஜெயம், தனவருவாய். |
| துலாம் | அஜீரண ரோகம், காரிய இடையூறு, பெரியோர் உதவி, பண விரயம். |
| விருச்சிகம் | மனச்சஞ்சலம், கௌரவக் குறைவு, கடின முயற்சி, ரோகநிலை. |
| தனுசு | மனோதைரியம், செல்வாக்கு, முயற்சி கைகூடும், பொருள் சேர்க்கை. |
| மகரம் | போசன சுகக்குறைவு, மனோ சங்கடம், முயற்சி தாமதம், அதிக செலவு. |
| கும்பம் | வெகுமானம், மாதர் நட்பு, போசன சுகம், அதிக பிரயாசை. |
| மீனம் | சோம்பல் நிலை, பிறருக்கு உதவுதல், சுபசெலவு, காரிய தாமதம். |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கல்வியங்காடு | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 160 | 120 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 260 | 300 | 300 |
| தக்காளி | 60 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 30 | 40 |
| கோவா | 70 | 80 | 80 |
| கரட் | 80 | 90 | 100 |
| பூசணி | 40 | 50 | 30 |
| புடோல் | 60 | 80 | 40 |
| வாழைக்காய் | 50 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 90 | 120 | 120 |
| பெரிய வெங்காயம் | 80 | 120 | 100 |
| பாகற்காய் | 180 | 160 | 140 |
| வெண்டிக்காய் | 40 | 30 | 40 |
| கரணைக்கிழங்கு | 30 | 30 | 40 |
| பயிற்றங்காய் | 140 | 140 | 100 |
| லீக்ஸ் | 90 | 100 | 100 |
| பீற்றூட் | 80 | -- | -- |
| கறிமிளகாய் | 400 | 300 | -- |
| முருங்கைக்காய் | 170 | 300 | -- |
| போஞ்சி | 120 | 140 | 120 |
| கத்தரி தம்புள்ள | 100 | 100 | -- |
| கீரை - 1 பிடி | 30 | 30 | 20 |
| தேசிக்காய் | 100 | 80 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 35 | 30 | 30 |

# எரிமலை வெடிக்கும் அபாயம் ஆயிரம் பேர் வெளியேற்றம்

## பிலிப்பைன்சில் பீதி

பிலிப்பைன்ஸ் நாட்டின் அல்பய் மாகாணத்தில் மயன் என்ற எரிமலை உள்ளது. அந்த எரிமலை வெடித்து சிதறும் அபாய நிலை நிலவுகிறது.

தற்போது அதில் இருந்து புகை கிளம்பியுள்ளது. இன்னும் 3 அல்லது 4 நாட்களில் அது வெடித்து சிதறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அவ்வாறு வெடித்து சிதறும் பட்சத்தில் அதில் இருந்து பாறைகளுடன் நெருப்பு குழம்பும் பாய்ந்து வரும். இதனால் மக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படும்.

இதனால் எரிமலையை சுற்றியுள்ள 30 கிராமங்களில் வாழும் மக்கள் பாதிக்கப்படுவார்கள். எனவே அக்கிராமங்களை சேர்ந்த சுமார் 45 ஆயிரம் பேர் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர். அவர்கள் 25 மையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு தேவையான உணவு தண்ணீர் போன்ற வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

எரிமலை வெடித்து சித றிய பின்னரும் 3 மாதங்களுக்கு பிறகு தான் இவர்கள் மீண்டும் தங்கள் இடங்களில் குடியிருக்க முடியும்.

(ஓ-2-4)

# இயேசு வாழ்ந்த காலத்து வீடுகள் ஆய்வின் மூலம் கண்டுபிடிப்பு

யேசு கிறிஸ்து பாலஸ்தீனத்தில் உள்ள பெத்லேமில் பிறந்தார். பின்னர் அவரது குடும்பம் இஸ்ரேலில் உள்ள நாசரேத்நகரில் குடியேறியது. சிறு வயதில்யேசு அங்குதான் வசித்துவந்தார். தற்போது நாசரேத் 65 ஆயிரம் மக்கள் வசிக்கும் பெரிய நகரமாக திகழ்கிறது.



யேசு காலத்தில் இந்த நகரம் எப்படி இருந்தது. ? என்பதை குறிப்பிடும் வகையில் உள்ள பழங்காலகட்டடங்கள் இல்லை. அந்த காலத்தில் உள்ள கட்டடங்கள் எல்லாம் அழிந்துவிட்டன. இந்த நிலையில் நாச ரேத் நகருக்கு வெளியே இஸ்ரேல் அகழ்வாராய்ச்சி நிபுணர்கள் ஆய்வு நடத்தினார்கள் அப்போது ஒரு இடத்தில் 50வீடுகள் புதைந்து கிடந்ததை கண்டு பிடித்தனர். 4 ஏக்கர் பரப்பளவு நிலத்தில் அவை புதைந்து கிடந்தன. இந்தவீடுகள் யேசு காலத்து வீடுகளாக இருக்கலாம் என்று ஆய்வாளர் யார்தனா அலக்சான்டிரா தெரிவித்தார்.

இந்த வீடுகள் சிறிய அளவில் இருக்கின்றன. சுண்ணாம்பு கற்கள் மற்றும் களிமண்ணை பயன்படுத்தி வீடுகளை கட்டியுள்ளனர். உணவு மற்றும் தண்ணீரை சேகரித்து வைக்கும் பாத் திரங்களும் அங்குகிடந்தன.


கி.மு. 100 ஆம் ஆண்டில் இருந்து கி.பி.100ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் இந்த வீடுகள் கட்டப்பட்டு இருக்க வேண்டும் என்று கதுருகின்றனர்.

நாசரேத் பிற் காலத்தில் ரோம் மன்னர்களின் பிடியில் வந்தது. அப்போது இந்த நகரம் அழிக்கப்பட்டு இருக்கலாம் என்றும் கருதப்படுகிறது.

(ஓ-4-2)

# தெலுங்கானா விவகாரத்தில் ஓரிரு நாளில் சுமூகத் தீர்வு

## மன்மோகன் சிங் தெரிவிப்பு



தெலுங்கானா மாநில விவகாரம் தொடர்பாக ஆந்திராவில் வெடித்துச் சிதறியுள்ள பெரும் கொந்தளிப்பை அடக்கும் வகையில் இன்னும் ஓரிரு நாளில் அனைவரும் ஏற் கும்படியான சுமூகத் தீர்வு காணப்படும் என்று பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

ராயலசீமா கடலோர ஆந்திராவைச் சேர்ந்த எம்.பிக்கள் காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.ராவ் தலைமையில் இன்று காலை பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்து தெலுங்கானா தனி மாநில அறிவிப்பால் ஆந்தராவில் எழுந்துள்ள பெரும் அமளி குறித்து விளக்கினார்.

இதனால் தெலுங்கானா மாநிலம் உருவாக்கப்படாது என்ற அறிவிப்பை அல்லது உத்தரவாதத்தை மத்திய அரசு வழங்க வேண்டும் என்றும் பிரதமரை அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

(ஓ-2-4)

# மும்பை போல லண்டனுக்கும் குறி தீவிரவாதிகள் திட்டம் ?

(லண்டன்)

மும்பையில் நடத்தியது போல லண்டன் நகரிலும் அடுத்த ஆண்டில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்த திட்டமிருப்பதாக ஸ்கொட்ல்ண்யார்ட் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இங்கிலாந்தின் லண்டன் நகரில் மும்பையில் நடத்தியதைப் போல தாக்குதல் நடத்த தீவிரவாதிகள் திட்டமிருப்பதாக தெரிய வந்துள்ளது.

இத் தாக்குதலில் குறைந்த எண்ணிக்கையிலான தீவிரவாதிகள் துப்பாக்கிகள் மற்றும் புதிய ரக வெடிபொருள்களுடன் ஈடுபடலாம் எனவும் ஸ்கொட்லன்யார்ட் எச்சரித்திருப்பதாக பத்திரிகைகளில் செய்தி வெளியாகியுள்ளது.

மேலும் இத்தாக்குதலை அடுத்த ஆண்டில் நடத்த தீர்மானித்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது பற்றி நாடாளுமன்ற துணைக்குழு தீவிரவாத தடுப்புத்தலைவர் பேட்ரிக் மெர்செர் கூறும் போது இத்தகவல் மிகவும் அச்சமளிக்கக்கூடியது என்பது உண்மை என்றார்.

இதையடுத்துதீவிரவாதிகளின் நடமாட்டம் குறித்து கண்காணிக்க பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. நுண்ணறிவுப் பிரிவி னரின் விசாரணையை முடக்கி விடவும் பாதுகாப்பு ஏற்பாடுகளை பலப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

(ஓ-2-4)

# தமிழ் படைப்புகள் ஆங்கிலத்தில் மொழிப்பெயர்க்கப்பட வேண்டும்

## இந்திய எழுத்தாளர் அருந்ததிராய்

(தஞ்சாவூர்)

தமிழ்ப்படைப்புக்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்படவேண்டும் என்றார் புக்கர் பரிசு பெற்ற எழுத்தாளர் அருந்ததி ராய்

கும்பகோணம் சோழபுரத்தில் சனிக்கிழமை நடைபெற்ற விழாவில் தேன் மொழி எழுதிய நெற்குஞ்சம் சிறுகதைத் தொகுப்பை வெளியிட்டு அவர் மேலும் பேசியது.

சாதாரணப் பெண்ணாக இருந்த என்னை எழுத்துதான் உலகறியச் செய்தது. கேரளத்தில் சிறு கிராமத்தைப் பின்னணியாகக் கொண்டு நான் எழுதிய சிறிய பொருட்களின் படைப்புக் கடவுள் என்ற நாவல் உலகின் உயர்ந்த விருதான புக்கர்பரிசு பெற்றது. அது ஆங்கிலத்தில் இருந்ததால் உடனடியாக அனைவரின் கவனத்தையும் பெற்றது.

தேன் மொழியின் சிறுகதைத்தொகுப்பும் மிகச் சிறந்த கதைகளைக் கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது. ஆனால் அது தமிழில் உள்ளதால் என்னால் படித்தறிய முடியவில்லை. அதை ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பு செய்தால் என்னைப் போன்றோர் படிக்க வாய்ப்பு ஏற்படும் .இதே போல வட்டார மொழி இலக்கியங்கள் அனைத்தும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்ட வேண்டும் அப்போது தான் இங்குள்ள பல சிறந்த எழுத்தளர்களை உலகறியும் பெண்களிடம் எழுதுவதற்கு நிறைய உள்ளது. அவர்களுக்கு அதற்கான ஆற்றலும் உள்ளது எனவே பெண்கள் நிறைய எழுத வேண்டும் என்றார்.

(ஓ-2-4)

# காகிகதப்பூமாலையாக திருக்குறள் காரைக்குடி ஓவியரின் புதிய முயற்சி

(காரைக்குடி)

காரைக்குடி ஓவிய ஆசிரியர் பார்த்திபன் திருக்குறன் காகிதப்பூ மலையை வடிவமைத்துள்ளார்.

இவர் ஓவியத்தில் புதுமை படைக்க வேண்டும் என்ற இலட்சியம் கொண்டவர். இதனால் ஓவியத்தில் புதிய முயற்சிகளை தொடர்ந்து செய்துவருகிறார்.


கடந்த 2003 இல் சரித்திரம் அன்று முதல் இன்று வரை என்ற வரலாற்று ஓவிய புத்தகம் உருவாக்கினார். 2007 இல் முத்திரை தாளில் (2.9.செ.மீ. நீளம்,3.9 செ.மீ.அகலம்) வானவில் கரும்பலகை என்ற சிறிய ஓவிய புத்தகம் தயாரித் தார். கடந்த ஆண்டு விரல் நுனி அளவில சின்ன உலகம் (1.செ.மீ.நீளம் 0.5 செ.மீ.அகலம்) என்ற புத்தகத்தை வடிவமைத்தார். இதில் 181 நாடுகளை பற்றிய குறிப்பு மக்கள் தொகை நில பரப்பு ஆட்சி முறை மொழி என பல தகவல்கள் இடம் பெற்றுள்ளன.

தற்போது 1330 திருக்குறளையும் எழுதி காகிதப் பூமாலையாக தொடுத்துள்ளார். அவர் கூறுகையில் படிக்கும் போதே கின்னஸ் சாதனைக்காக முயற்சித்து வருகிறேன். கிறிஸ்துமஸ் பண்டிகை அன்று திருக்குறள் மாலையை இயேசுவிற்கு அணிவித்து மகிழ்வேன். இம்மாலை தயாரிக்க மூன்று மாதம் ஆனது என்றார்.

(ஓ-2-4)

# மூன்று விண்வெளி வீரர்களுடன் சோயுஷ் விண்கலம் ஏவப்பட்டது

அமெரிக்கா, ரஷியா, ஜப்பான், ஜேர்மனி உள்ளிட்ட நாடுகள் இணைந்து விண்ணில் சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தை கட்டி வருகின்றனர். இதற்கு தேவையான பொருட்கள் ரொக்கெட் மூலம் கொண்டு செல்லப்படுகிறது?



இந்நிலையில் ரஷியாவின் சோயுஷ் டி.எம். ஏ-17 என்ற விண்வெளி ஓடம் ரொக்கெட்டுடன் இணைக்கப்பட்டு கஜகஸ்தானில் உள்ள பைகோனுர் காஸ்மோப்ரோம் விண்வெளி தளத்தில் இருந்து சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்துக்கு அனுப்பப்பட்டது.

இதில் ரஷியாவின் ஒலெக் கோதோவ் அமெரிக்கா நாசாவின் டிமோதி கீமர் மற்றும் ஜப்பானின் சோய்சி நொகுசிர் ஆகிய விண்வெளி வீரர்கள் பயணம் செய்தனர்.

திட்டமிட்டபடி சோயுஷ் டி.எம். ஏ. -17 விண்வெளி ஓடத்துடன் கஜஸ்தானில் உள்ள பைகோனூர் காஸ் மோட்ரோம் தளத்தில் இருந்து நேற்று அதிகாலை 1 மணியளவில் ரொக்கெட் ஏவப்பட்டது.

இந்த 3 வீரர்களும் சர்வதேச விண்வெளி மையத்தை சென்றடைகின்றனர். அங்கு ஏற்கனவே தங்கியிருக்கும் அமெரிக்க வீரர் ஜெப்வில்லியம்ஸ் , ரஷி வீரர், மாசிம்சரேவ் ஆகியோருடன் இணைந்து பணியாற்றுவார்கள் . அவர்களின் வில்லியம்ஸ், சரேவ் ஆகியோர் வருகிற மார்ச் மாதம் பூமிக்கு திரும்புவார்கள்.

தற்போது சென்றுள்ள 3 வீரர்கள் 126 நாட்கள் அங்கு தங்கியிருந்து விட்டு எதிர் வரும் மே மாதம் பூமிக்கு திரும்புவார்கள் என்று ரஷிய விண்வெளி ஆராய்ச்சி மைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

(ஓ- 4-9)

# ஹொலிவுட் நடிகை பிரிட்டனி மரணம்

(லாஸ் ஏஞ்சல்ஸ்)



ஹொலிவுட் நடிகை பிரிட்டனி மூர்பி அவரது வயது 32. அவர் க்ளுலெஸ் கேர்ள், இண்டரப்டப் ஆகிய படங்களில் நடித்தவர். அவர் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் உள்ள மருத்துவமனையில் இறந்துவிட்டார்.

இறப்பதற்கு 2 மணி நேரத்துக்கு முன்பு அவர் ஹொலிவுட் ஹில்ஸ் நகரில் உள்ள தன் வீட்டில் குளியல் அறையில் சுய நினைவு இல்லாமல் கிடந்தார். இதைப்பார்த்த அவர் தாயார் அவரை உடனடியாக மருத்துவமனையில், சேர்த்தார். அங்கு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. இருந்தும் அது பயனில்லாமல் இறந்து போனார்.

மரணத்துக்கு என்ன காரணம் என்பது தெரியவில்லை. அவர் ஏஞ்சலீனா ஜோலி , மைக்கேல் டக்ளஸ் ஆகியோருடன் நடித்த போதிலும் அவர்கள் அளவுக்கு வெற்றி பெறமுடியவில்லை. சமீபகாலமாக குறைந்த பட் ஜெட் படங்களில் நடித்தார். கணவர் இங்கிலாந்து நாட்டு திரைக் கதாசிரியர் சைமன்மோன்ஜாக் ஆவர். (ஓ-2-4)

Hutch

# யாழ்ப்பாணத்தில் நாங்கள்!



இப்பொழுது Hutch வலையமைப்பு
யாழ் குடாநாட்டில் அமைந்துள்ள
யாழ்ப்பாணம், சாவகச்சேரி மற்றும் புலோலி
ஆகிய நகரங்களுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளது.

www.hutch.lk

0785 785785

# குருப்பெயர்ச்சி பலன்கள்

## 15-12-2009 முதல் 21-11-2010 வரை

### மீனம்

(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி முடிய)

**எல்லோரிடமும் 'நல்லவர்' என்று பெயர் எடுக்கும் மீன ராசி நேயர்களே!**

உங்கள் ராசிநாதன் குரு இதுவரை வலிமை இழந்திருந்தார். இப்பொழுது வலிமை அடைந்து விரயஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகிறார். எனவே இந்த குருப்பெயர்ச்சி விரயத்தையே கொடுக்கும் என்று நீங்கள் நினைக்க வேண்டாம். இது ஒரு இரட்டைக் குருப்பெயர்ச்சியாகும். பாதிக்கு மேல் பணமழையில் நனையப் போகிறீர்கள்.

சாதனை நிகழ்த்தி சரித்திரத்தில் இடம் பிடிக்கும் நீங்கள், சோதனைகளை வெல்லும் ஆற்றலை இந்த குருப்பெயர்ச்சி உங்களுக்கு கொடுக்கப் போகிறது. திட்டமிட்ட காரியங்களை நீங்கள் திட்டமிட்டபடியே செய்ய குருவின் அருட்பார்வை தான் உங்களுக்கு வேண்டும்.

அந்த குரு வக்ரகதியில் இருக்கும் பொழுதுதான் நீங்கள் யோசிக்க வேண்டும். மற்ற காலங்களில் எல்லாம் வழிபட்டால் பலன் கொடுப்பார்.

அப்படிப்பட்ட சிறப்பான குருவை நீங்கள் பெயர்ச்சிக்கு முன்னதாகவே கும்பிட்டு மகிழ வேண்டும். யாகங்களில் கலந்து கொண்டு யோகங்களைக் காணலாம். குரு வழிபாட்டின் போது நடைபெறும் அன்னதானம், வஸ்திரதானம் ஆகிய அனைத்து கைங்கரியங்களை முன்நின்று முறையாக நடத்துபவர்களுக்கு பொன்னான எதிர்காலம் அமையும்.

குரு இருக்கும் இடத்தைக் காட்டிலும், பார்க்கும் இடத்திற்கு பலன் அதிகம் என்பதால் குரு பார்வை உங்கள் குழப்பங்களை எல்லாம் அகற்றும். அதன் அருள் இருந்தால் அனைத்து காரியங்களும் நிறைவேறும். பன்னிரெண்டில் சஞ்சரிக்கும் குருவின் பார்வை 4,6,8 ஆகிய இடங்களில் பதிகிறது.

எனவே அதற்குரிய ஆதிபத்தியங்கள் எல்லாம் புனிதமடைகின்றன. சில மாதங்கள் கழித்து அதிச்சாரமாக ஆதிபத்தியங்கள் எல்லாம் புனிதமடைகின்றன. சில மாதங்கள் கழித்து அதிச்சாரமாக மீனத்திற்குச் செல்லும் பொழுது 5,7,9 ஆகிய இடங்களைப் பார்க்கப் போகிறார். இந்த ஆறு இடங்களும் புனிதமடைந்து அற்புத பலன்களை அள்ளி வழங்கப்போகின்றன.

**உங்களோடு இணைந்தவர்களுக்கு நன்மையே கிடைக்கும்.**

நீங்கள் எந்தக் காரியத்தைச் செய்தாலும் ஒரு முறைக்கு பலமுறை யோசிப்பீர்கள். மேலும் பிறரிடம் யோசனைகளையும் கேட்டு ஒரு நல்ல முடிவை தேர்ந்தெடுப்பீர்கள். அதனால் தான் உங்களுக்கு யோகங்கள் வந்து சேருகின்றன. உங்களோடு தொடர்பு வைத்துக் கொள்ள பலரும் பிரியப்படுவர்.

நீங்கள் யாரிடம் போய்ச் சேர்ந்தாலும் அவர்களுக்கும், அவர்களால் உங்களுக்கும் நன்மை கிடைக்கும். தெய்வ பக்தியும், தேச பக்தியும் உங்களிடம் இணைந்தே இருக்கும். தேக நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

சுறுசுறுப்பாக செயல்பட்டு சொல்லை செயலாக்கி காட்டுபவர்களின் மத்தியில் முதலிடம் பிடிப்பவர்கள் நீங்கள். எந்தப் பிரச்சினை உங்கள் வாழ்வில் வந்தாலும் அத்தனையிலும் வெற்றி பெற வைப்பது குரு அருள் ஒன்றுதான் என்பதைக் கண்டு கொள்வீர்கள்.

சுக்ரன் உங்கள் ராசிக்கு அஷ்டமாதிபதியாக விளங்குவதால், குடும்ப பிரச்சினைகள் உங்களுக்கு கூடுதலாகவே இருக்கும். எனவே, பொருத்தம் பார்த்து செய்யும் திருமணத்தால் தான் பொன்னான வாழ்க்கையை நீங்கள் அமைத்துக் கொள்ள இயலும்.

உங்கள் ராசிநாதன் வியாழன் 'புத்திகாரகன்' என்று வர்ணிக்கப்படுகிறார். சுப கிரகமாக விளங்கும் அதன் சாரபலத்திற்கேற்ப படிப்பு, தொழில் போன்றவற்றைத் தேர்ந்தெடுத்தால் பார் போற்றும் வாழ்க்கை அமையும்.

குருப்பெயர்ச்சியானவுடன், அதாவது 15.12.2009 முதல் 4.5.2009 வரை மீண்டும் 8.11.2010 முதல் 21.11.2010 வரை கும்பத்தில் குரு சஞ்சரிக்கிறார். அப்பொழுது அதன் பார்வை சுக ஸ்தானம், எதிர்ப்பு, வியாதி, கடன் ஆகியவற்றைக் குறிக்கும் ஸ்தானம், அஷ்டம ஸ்தானம் ஆகியவற்றை பார்க்கப் போகிறார். அந்த இடங்கள் எல்லாம் புனிதமடைந்து புதிய வாழ்க்கையை உங்களுக்கு அமைத்துக் கொடுக்கப் போகிறது.

இடையில் அதிச்சாரமாக 5.5.2010 முதல் 7.11.2010 வரை மீன ராசியில் சஞ்சரித்து அங்கேயே வக்ரம் அடைந்தும் சில நாட்கள் சஞ்சரிக்கிறார். வக்ர காலத்தில் வளர்ச்சி ஏற்பட சுய ஜாதக ரீதியாக ஆராய்ந்து முறையான தெய்வ வழிபாடுகளை மேற்கொள்வது நல்லது.

யோக பலம் பெற்ற நாளில் அனுகூலம் தரும் ஆலயங்களை நோக்கி அடியெடுத்து வைப்பதன் மூலமும் ஆச்சர்யப்படத் தக்க பலன்களைக் காணலாம்.

மீன ராசியில் குரு சஞ்சரிக்கும் பொழுது, அதன் பார்வை உங்கள் ராசிக்கு 5,7,9 ஆகிய ஸ்தானங்களில் பதிகிறது. எனவே, புத்திர, களஸ்திர, பாக்ய ஸ்தானங்கள் எல்லாம் புனிதமடைந்து குடும்ப முன்னேற்றம் கூடும் விதத்தில் அமையப் போகிறது. குரு பன்னிரெண்டாமிடத்தில் சஞ்சரிக்கும் போது என்னென்ன விதங்களில் மாற்றங்களைத் தரப்போகிறார் என்பதைப் பார்ப்போம்.

*'பன்னிரெண்டில் குரு வந்தால் பயணங்கள் அதிகரிக்கும்! இனியென்றும் மகிழ்ச்சி வரும்! இணைவோரால் நன்மை வரும்! மணியொலியாய் புகழ் பரவும்! மகத்தான வரவும் வரும்! துணிவோடு செயல்பட்டால், தொடர்ந்தே தான் வெற்றி வரும்!'*

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது பன்னிரெண்டாமிடத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது, பயணங்கள் அதிகரிக்கும். பகல், இரவாய் உழைக்கும் சூழ்நிலை உருவாகும். புண்ணிய காரியங்களை முன்நின்று நடத்துவீர்கள். துணிவும், தன்னம்பிக்கையும் குறையாமல் பார்த்துக் கொள்வது நல்லது. உங்களோடு இணைந்து செயல்படுபவர்களுக்கு யோகமாகும்.

**விருப்பங்களை நிறைவேற்றும் வியாழனின் பார்வை!**

குருவின் பார்வை உங்கள் ராசிக்கு 4,6,8 ஆகிய இடங்களில் பதிவதால், சுகங்களும், சந்தோஷங்களும் வந்து சேரும். வீடு கட்டும் முயற்சி அல்லது வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். குடும்பத்தில் யாருடைய ஜாதகத்தில் செவ்வாய்பலம் பெற்றிருக்கிறதோ அவர்கள் பெயரில் பூமி வாங்குவதே நல்லது. புதிய வாகனங்கள் வாங்கும் சூழ்நிலை ஒருசிலருக்கு உருவாகும்.

குருவின் பார்வை ரோக ஸ்தானத்தில் பதிவதால் உடல்-ஆரோக்கியம் சீராகும். கடன் சுமையும் குறையும். இனி உங்களுக்கு வரவேண்டிய பாக்கிகளும் வந்து சேரும். உத்தியோகத்தில் வேலைப்பளு கூடினாலும் அதை பொறுமையாக இருந்து பார்த்து மேலதிகாரிகளிடம் நல்ல பெயர் எடுத்துக் கொள்வீர்கள்.

இழப்புகள் ஸ்தானம் குரு பார்வையால் புனிதமடைவதால் சென்ற சில வருடங்களாக வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புகளை ஈடு செய்வீர்கள். இடமாற்றம், ஊர்மாற்றங்கள் விரும்பியபடியே வந்து சேரும். இல்லத்திற்கு தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

திருமணம் போன்ற சுபகாரியங்களை நடத்துவதில் இருந்த தடை அகலும். கூட்டு முயற்சியில் இருந்து விடுபட்டு தனித்தியங்க முற்படுபவர்கள் சுய ஜாதக ரீதியாக குருவின் பாதசார பலமறிந்து அதற்குரிய பரிகாரங்களைச் செய்து விட்டு பிறகு தொடங்குவது நல்லது.

**மீன குருவின் பார்வையால் ஏற்படும் பலன்கள்!**

மீனத்தில் சஞ்சரிக்கும் குரு 5,7,9 ஆகிய இடங்களைப் பார்க்கிறார். அதன் பார்வை பதியும் நேரமான மே 5 முதல் நவம்பர் 7 வரை மிக மிக நல்ல நேரமாகும். தொட்ட காரியங்கள் வெற்றி பெறும். துணையாக இருப்பவர்களால் ஏற்பட்ட தொல்லை அகலும். நண்பர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவர்.

பூர்வீக சொத்துக்களால் இலாபம் கிடைக்கும். பிள்ளைகளின் திருமணத்தை ஜாம்ஜாமென நடத்தி முடிப்பீர்கள். முதல் பெண்ணுக்கு திருமணம் முடியும் பொழுதே அடுத்த பெண்ணையும் கேட்டு மாப்பிள்ளை வீட்டார் வாயிலில் நிற்பர்.

சுப காரியங்கள் தொடர்ந்து நடைபெறும். இந்த நேரத்தில் தந்தை வழி உறவில் ஏற்பட்ட விரிசல் மறையும். வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும். பாகப் பிரிவினைகள் சுமூகமாக முடியும்.

உடன்பிறப்புகள் உங்கள் கருத்துகளுக்கு ஒத்து வருவர். முன்பு வாங்கிய இடத்தை கொடுத்து விட்டு புதியஇடம் வாங்க முயற்சிப்பீர்கள். பண வரவு திருப்தி தரும். நூதன பொருட்களின் சேர்க்கை உண்டாகும். அயல் நாட்டு பயணம் கூட தெசா புத்தி பலம் பெற்றவர்களுக்கு வந்து சேரும்.

**அக்கறை செலுத்த வேண்டிய வக்ர காலம்**

**(16.07.2010 முதல் 7.11.2010 வரை)**

இக்காலத்தில் நீங்கள் கூடுதல் விழிப்புணர்ச்சி காட்ட வேண்டும். அப்பொழுது தான் நீங்கள் நன்மைகளை வரவழைத்துக் கொள்ள இயலும். ஆரோக்கியத்தைப் பராமரிக்க அதிக செலவு ஏற்படும். தொழில் கூட்டாளிகளின் எண்ணங்கள் மாறலாம். ஊர்மாற்றம், இடமாற்றம், பதவிமாற்றங்கள் வந்து சேரலாம்..

பலன்தரும் பரிகாரங்களைச் செய்வதோடு, அருகில் இருப்பவர்களையும் அனுசரித்துச் சென்றால் தான் ஆதாயம் கிடைக்கும்.

**ஜோதிடக் கலைமணி சிவல்புரி சிங்காரம்**

மீன ராசிப் பெண்களுக்கு இந்த குருப்பெயர்ச்சியால் மிகப் பெரிய மாற்றங்கள் வரும். புகுந்த வீட்டிலுள்ள பிரச்சினைகள் தீரும். பிறந்த வீட்டிலிருந்து வருமானம் வந்து சேரும்.

சான்றோர்கள், ஆன்மீகப் பெரியோர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது. குருவின் வக்ர காலத்தில் சுய ஜாதக ரீதியாக புத்திக்கேற்ற தெய்வ வழிபாடுகளை மேற்கொண்டால், மன அமைதியும் கிடைக்கும். மக்கட் செல்வங்களால் வந்த கவலையும் தீரும்.

பன்னிரெண்டாமிடத்தில் சஞ்சரிக்கும் குருவால் பண வரவு பெருகவும், பாராட்டும், புகழும் கூடவும், இனிய வாழ்க்கை அமையவும் சிவன், அம்மன், நந்தி மற்றும் தெட்சிணாமூர்த்தியை வழிபட்டு வாருங்கள்.

(முற்றும்)

---

# சண்டே லீடர் பத்திரிகைக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படும்

**பாதுகாப்புச் செயலாளர் அறிவிப்பு**

(கொழும்பு)

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ சண்டே லீடர் பத்திரிகைக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப் போவதாக அறிவித்துள்ளார். குறித்த பத்திரிகை பாதுகாப்புச் செயலாளருக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் செய்திகளை வெளியிட்டதால் அதற்கு நட்ட ஈடாக நூறு கோடி ரூபாவை வழங்க வேண்டுமென்று பாதுகாப்புச் செயலாளரின் சட்டத்தரணி சனத் விஜேவர்தன, சண்டே லீடர் வெளியீட்டாளருக்கும் அதன் பிரதம ஆசிரியருக்கும் கோரிக்கைக் கடிதம் (வக்கீல் நோட்டிஸ்) அனுப்பி வைத்துள்ளதாக அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. நட்ட ஈட்டை வழங்க மறுக்கும் பட்சத்தில் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், கல்கிஸை நீதிமன்றத்தில் பத்திரிகை நிறுவனத்தினர் அளித்த வாக்குறுதியை மீறி செய்தி வெளியிட்டமை தொடர்பாகவும் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது. கடந்த டிசம்பர் ஆறாம் திகதியும் 13 ஆம் திகதியும் சண்டே லீடர் பத்திரிகையில் வெளியான செய்திகள் பாதுகாப்புச் செயலாளருக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புச் செயலாளருக்கு எதிராக அவதூறான செய்திகளை வெளியிடக்கூடாதென கல்கிஸை நீதிமன்றத்தில் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தும் அவ்வாறான செய்திகளை வெளியிட்டிருப்பதாக பத்திரிகையின் வெளியீட்டாளர் லால் விக்கிரமதுங்க மற்றும் அதன் பிரதம ஆசிரியர் ஆகியோருக்கு எதிராகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. (ஓ-2-4)

---

# ஓமந்தை - பளைப் பகுதியில் ரயில் பாதைப் பணிக்கு இந்தியா மேலும் கடனுதவி

(கொழும்பு)

இலங்கையில் ரயில் பாதை பணிக்கு இந்தியா மேலும் ரூ. 2 ஆயிரத்து 125 கோடி கடனுதவி அளிக்க முன்வந்துள்ளது.

இலங்கையில் போர் நடைபெற்ற பகுதிகளில் இலங்கை அரசு புனரமைப்பு பணிகளை மேற்கொண்டுள்ளது.

அங்கு இந்திய உதவியுடன் ரயில் பாதைகளுக்கான தண்டவாளம் அமைக்கும் பணி நடைபெறுகிறது.

இந்தப் பணிகளை அந்த பகுதியில் ஏற்கனவே மடு தலைமன்னார் இடையேயான ரயில் தண்டவாளம் அமைக்கும் பணிகள் முடிவடைந்து விட்டன.

தற்போது இலங்கை வடக்குப் பகுதியில் ஓமந்தை, பளை ஆகிய பகுதிகளுக்கு இடையே தண்டவாளம் அமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது.

இந்த பணிகளை மேற்கொள்வதற்கு இலங்கை அரசுக்கு மேலும் சுமார் ரூ. 2 ஆயிரத்து 125 கோடி கடனுதவி அளிக்க இந்தியா முன்வந்துள்ளதாக கொழும்பில் உள்ள இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது. (ஓ-2-4)

# திருவாதவூரடிகள் புராணத்திற்கு சிறந்த உரை செய்த உரையாசிரியர் ம.க.வேற்பிள்ளை

திருவாதவூரடிகள் புராணத்திற்கு சிறந்த உரை எழுதிய பெருமை உரையாசிரியர் ம.க.வேற்பிள்ளை அவர்களையேசாரும். வாதவூரர் தந்த திருவாசகம் 8ஆம் திருமுறையில் வருகின்றது. திருவெம்பாவைக் காலமாகிய 10 நாட்களும் திருவாதவூரர் அடிகள் புராணம் படித்து பயன் சொல்வது வழமை. இதேபோன்று மார்கழி மாதம் முழுவதும் திருவாசகம் தான் ஓதப்படல் வேண்டும் என்பது நியதியாகவுள்ளது. மார்கழி மாதம் தேவர்களுக்கு உஷக் காலத்தைக் குறிக்கிறது. *திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்* என்பது ஆன்றோர் வாக்கு.

தென்னானுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி என்பதை உறுதியாக உணர்த்து கின்ற நூல் திருவாசகம் ஒன்றே ஆகும். திருவாசகம் என்ற அரிய நூலைத் தந்த மாணிக்கவாசகர் சுவாமிகளை யாவரும் திருவாதவூரர் என மிக்க மரியாதையாக வணங்கி வருகின்றனர்.

இவருடைய வாழ்க்கை சைவ சிந்தாந்த வாழ்க்கை. மாணிக்கவாசக சுவாமிகள் சைவ வாழ்க்கையைச் சிறப்பாக வாழ்ந்தவர். இறைவனாகிய சிவபொருமானுடன் இரண்டறக் கலந்து இனிய பிறவாநிலை எய்தியவர் அச்சம் வருகின்ற போதெல்லாம் சிவனை அமுதமுது வேண்டி அச்சம் அகன்ற ஞானி.

திருவாதவூர் என்பது மாணிக்கவாசக சுவாமிகள் பிறந்த தலம் இது மதுரையில் இருந்து 16 மைல் தூரத்தில் உள்ளது. இங்குள்ள சுவாமியின் பெயர் வாதவூரர் அல்லது மறைநாதர். அம்பிகையின் பெயர். வேதநாயகி அல்லது ஆரவல்லி என்பதாகும். தலவிருட்சம் மகிழ், தீர்த்தம் அக்கினித் தீர்த்தம் மேலும் வெளிப்பிரகாரத்தில் பொற் தாமரை தடாகம் ஒன்றும் இருக்கிறது. உட்பிரகாரத்தில் கபில தீர்த்தம் உண்டு.

இக் கோயிலின் அருகே மாணிக்கவாசகரின் இல்லம் இருந்தமையால் திருவெம்பாவை 10 நாட்களும் இவருக்கு திருவிழா செய்வார்கள். இந்த வாதவூரனை வழிபட்ட வாதவூரடிகள் ஆகிய மாணிக்கவாசகர் சுவாமிகளின் வரலாறே திருவாதவூரடிகள் புராணமாகும். இதனை கடவுள் மாமுனிவார் இயற்றியுள்ளார்.

திருவாதவூரடிகள் புராணம் பாயிரம் , மந்திரிச் சருக்கம், திருப்பெருந்துறை சருக்கம், குதிரையாட்டசருக்கம், மண்சுமந்த சருக்கம், திருவம்பலச்சருக்கம், புத்தரை வாதில் வென்ற சருக்கம், திருவடி பெற்ற சருக்கம் என்பவற்றைக் கொண்டதாகும். இங்கு மொத்தமாக 556 பாடல்கள் காணப்படுகின்றது.

உரை ஆசிரியர் ம.க.வேற்பிள்ளை அவர்கள் 1848ஆம் ஆண்டு தை மாதம் 8ஆம் திகதி மட்டுவிலில் அவதரித்தார். தவப்பெருந்திரு ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் நேர்மாணாக்கர் ஆவார். நாவலர் ஸ்தாபித்த சிதம்பரம் நாவலர் சைவப் பிரகாச வித்தியாசாலையில் 1907ஆம் ஆண்டு முதல் 1930 ஆண்டு வரையுள்ள 23 ஆண்டு காலம் தர்ம பரிபாலகராய் பணியாற்றியவர். என் பாட்டனார் வழங்கிய காணி நிலத்தில் மட்டுவில் சந்திர மௌலீச வித்தியாசாலையை ஸ்தாபித்த பிதாமகர் ஆவார்.

பெருமை மிகுந்த திருவாத அடிகள் புராணத்திற்கு இருவர் உரை எழுதி இருக்கிறார்கள். ஒருவர் உரையாசிரியர் ம.க.வேற்பிள்ளை அவர்கள் மற்றையவர் சுன்னாகம் அ. குமாரசாமிப் புலவர் . புலவர் எழுதிய உரை சுருக்கமானது.

உரையாசிரியரின் உரையோ மிகவும் விரிவானது. திருவாதவூரடிகள் புராணத்திற்கு இன்று தமிழ் நாட்டிலும், ஈழ நாட்டிலும் பலர் உரை எழுதியிருக்கின்றார்கள். யாழ்ப்பாணத்தவர் பலர் உரையாசிரியரின் உரையை தழுவியே உரை செய்துள்ளனர்.


எனினும் திருவாதவூரடிகள் புராணத்திற்கு சிறந்த உரை எழுதிய பெருமை யாழ்ப்பாணத்தவராகிய உரையாசிரியர் ம.க.வேற்பிள்ளை அவர்களையே சாரும். இதற்கு நிகராக , ஈடாக



இதுவரை வேறு உரை வரவில்லை என அறிஞர்கள் கூறிய கருத்தை பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள் மிகவும் நயமாக எடுத்துக் கூறுவார்கள். எனவே வழிபாட்டு மாதமாகிய மார்கழித்திருவெம் பாவைக் காலத்தில் திருக்கோயில்கள் தோறும் திருவாதவூரடிகள் புராணத்தைப் படித்து சிவபொருமானை வழிபாடு செய்வோமாக.

**க.சிவபாலன்**





சுழிபுரம் ஸ்ரீ அம்மாபகவான் சற்சங்க ஆன்மீகப் பிரார்த்தனை மையத்தில் இடம்பெற்ற நன்றி நவிலல் நாள் நிகழ்வில் கொழும்பில் இருந்து வருகை தந்த கணநாதலிங்கம்ஜி அடியார்களால் வரவேற்கப்படுவதையும் ஸ்ரீ அம்மாபகவான் ஸ்ரீ முத்தி எழுந்தருளி இருப்பதையும் படங்களில் காணலாம்.

# இன்று உலகுக்கு முன்னுதாரணமாக நாம் திகழ்கின்றோம் -ஜனாதிபதி

(கொழும்பு)

பயங்கரவாதத்தை முற்றாக ஒழித்த எம்மை முன்னுதாரணமாகக் கொண்டு முழு உலகமும் தற்போது செயற்பட ஆரம்பித்துள்ளது. நாம் எம் தாய் நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

சர்வதேச ரீதியில் விருதுகளைப் பெற்ற இலங்கையின் புத்தாக்குணர்களை கௌரவிக்கும் நிகழ்வு ஒன்று நேற்று முன்தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் அலரி மாளிகையில் நடைபெற்றது.

இதில் உரையாற்றிய போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கூறுகையில், எத்தகைய தடைகள் வந்தாலும் உலகின் முன்னணி நாடாக இலங்கையைக் கட்டியெழுப்புவதே எமது இலக்காகும். இலங்கையில் கடந்த 4 வருடங்களில் பாரிய சிந்தனைப் புரட்சியை ஏற்படுத்த எம்மால் முடிந்துள்ளது.

எமது மக்களை பற்றிய பெரும் நம்பிக்கை எனக்குண்டு அவர்கள் இன, மத, மொழி பேதங்களுக்கு அப்பால் தாய் நாட்டை பெரிதும் நேசிப்பவர்கள் என்பதும் எனக்குத் தெரியும்.

எத்தகைய தடைகள் வந்தாலும் நாம் எமது இலக்கை அடைய வேண்டும். நாட்டில் பயங்கரவாதத்தை ஒலித்தவர்கள் கிராமத்து இளைஞர், யுவதிகளே புதியதைச் செய்ய புதிய இலங்கையை கட்டியெழுப்புவதற்கு அவர்கள் தயாராகவுள்ளனர்.

கடந்த காலங்களில் பட்டத்தைக்கூட வெளி நாடுகளில் இருந்து இறக்குமதி செய்த யுகம் ஒன்று இருந்தது. புதிய கண்டுபிடிப்புகள் சம்பந்தமாக எவரும் சிந்திக்கவில்லை.

வாடகை வீட்டில் வாழ்வது போலவே எம் மக்கள் அப்போது வாழ்ந்துள்ளனர். முடிவில்லாத பயங்கரவாத யுத்தத்தை போன்றே நாட்டிற்கும் எதிர்காலம் இல்லை என எண்ணிய புத்தாக்குணர்கள் பலர் வெளிநாடுகளுக்குப் புறப்பட்டனர். இத்தகைய நிலையை கடந்த 4 வருடங்களில் எம்மால் மாற்ற முடிந்துள்ளது என்றார். (ஓ-2-4)

## மரதன் ஓட்டம்

(யாழ்ப்பாணம்)

பாசையூர் புனித அந்தோணியார் விளையாட்டுக்கழகத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவு விழாவின் ஆரம்ப நிகழ் வாக உள்ளூர் வீரர்கள் பங்குபற்றும் மரதன் ஓட்டப் போட்டி எதிர்வரும் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு பாசை யூர் புனித அந்தோணியார் ஆலய முன்ற லில் இருந்து ஆரம்பமாகவுள்ளது. (ஓ)

# சந்தர்ப்ப வாதத்துக்கு துணைபோய் பொன்னான சந்தர்ப்பத்தை இழக்ககூடாது

## அமைச்சா ஜீ.எல்.பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

சிந்திக்காமல் பொறுப்பற்றவிதத்தில் கருத்துக்களை வெளியிடும் ஒருவரையே எதிர்க்கட்சிகள் இன்று ஜனாதிபதி வேட்பாளராக களம் இறக்கியுள்ளன. எனவே எமது நாட்டின் எதிர்காலத்திதைக் கருத்தில் கொண்டு நாம்சிந்தித்து செயற்பட வேண்டும் என அமைச்சர் ஜீ.எல் . பீரிஸ் தெரிவித்தார். எந்த வெரு வேலையை செய்வதற்கும் அனுபவமும் பயிற்சியும் கட்டாயம் தேவை இல்லையேல் அதன் முடிபு பாரதூரமானதாகத்தான் இருக்கும். தற்போதைய அரசியல் களத்தில் அவ்வாறான ஒரு நிலை மையே காணப்படுகின்றது எனவும் அவர் கூறினார். ஜனாதிபதித் தேர்தலும் சட்டத்தரணிகளின் பொறுப்பும் என்ற தலைப்பில் நேற்று முன்தினம் மஹாவலி கேந்திர நிலையத்தில் இடம்பெற்ற கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் குறிப்பிட்டார். இது தொடர்பில் மேலும் அவர் குறிப்பிடுகையில் இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இடம்பெற்ற சில சம்பவங்கள் தொடர்பாக பொறுப்பற்றவித்தில் ஊடகங்களுக்கு இவர் கருத்துக்களை வெளியிட்டதால் ஐக்கிய நாடுகளின் கவனத்திற்கு அந்தப் பிரச்சினை சென்றுள்ளது. அதுமாத்திரமல்லாமல் போர் குற்றம் தொடர்பாக விசாரணைகளை நடத்த வேண்டும் என்ற அளவுக்கு உருவெடுத்துள்ளது. இது எங்கு போய் முடியுமென தெரியவில்லை.

நாட்டின் பொறுப்பு வாய்ந்த பதவியான ஜனாதிபதி பதவிக்காக போட்டியிடும் ஒருவர் இவ்வாறாக செயற்படுவதானது அவரின் அரசியல் ஞானத்தை எடுத்துக்காட்டியுள்ளது. எனவே நாம் இந்த தருணத்தில் மிகவும் சிந்தித்து பொறுப்புடன் செயற்பட வேண்டும். நாம் மதிக்கின்ற ஜனநாயகத்தை பாதுகாக்க வேண்டும் . அதை இராணுவமயமாக்கலுக்கு அனுமதித்து விடக்கூடாது .

நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி ஜனநாயகத்தை நிலை நாட்டுவதற்கான வேலைத் திட்டத்தை நாம் இப்பொழுது மேற்கொண்டு வருகின்றோம். இதனை குழப்பி அரசியல் லாபம் பெறும் நோக்கில் இன்று பலர் கூட்டணி சேர்த்துக்கொண்டு செயற்படுகிறார்கள். இவர்களின் இந்த வலையில் சிக்குண்டு எமது நாட்டின் எதிர்காலத்தை வீணடித்துவிடக்கூடாது.

கடந்த காலங்களில் எமது நாட்டின் பயங்கரவாத செயற்பாடுகள் நிலவியதால் பாதுகாப்பற்ற ஒரு சூழல் காணப்பட்டது. இதனால் மக்கள் அச்சத்துடனேயே இருந்தார்கள். அது மாத்திர மல்லாமல் வெளிநாட்டவர்களும் எமது நாட்டில் முதலீடுகளை செய்வதற்கு தயங்கினார்கள். ஆனால் இன்று நிலைமை முற்றிலும் மாறியுள்ளது சந்தர்ப்பவாத அரசியலுக்கு துணைபோய் இந்த பொன்னான சந்தர்ப் பத்தை வீணடித்து விடக்கூடாது எனவும் கூறினார். (ஓ-2-4)

# பிறந்த எண் பலன்களும் அதிர்ஷ்ட பெயர்களும்

## உடல் எண் : 6 விதி எண் : 9

### உடலமைப்பு

பிறந்த எண் 6 விதி எண் 9 ஆகக் கொண்டு பிறந்தவர் சுக்கிரன், செவ்வாய் ஆதிக்கத்திற்குட்பட்டவர் ஆவர். இவர்கள் கம்பீரத் தோற்றமுடையவர்களாகவும், பிறருக்கு அச்சத்தை விளைவிக்கக் கூடியவர்களாகவும் காணப்படுவர். இவர்கள் பார்வை பிறரை ஈர்க்கும் வண்ணம் இருக்கும்.

### மன, குணவியல்பு

இவர்கள் தைரியம் மிக்கவர்களாக இருப்பர். தாம் நினைப்பதை உடனே நிறைவேற்றி விட வேண்டுமென்ற எண்ணம் கொண்டவர்கள்.

இந்த உலகத்தில் உள்ள இன்பங்களை அனுபவிக்கவே மனிதர் பிறந்துள்ளனர். அதை அனுபவிப்பதே தன்னுடைய இலட்சியம் என்று எண்ணக் கூடியவர்கள்.

இவர்கள் கடவுள் நம்பிக்கை கொண்டவர்களாக இருந்தாலும் இந்த உலகம் அதிலுள்ள சுகங்களும் மாயையானவை என்ற கொள்கையை எதிர்ப்பவர்கள். விதி என்பது பொய்: முயற்சியால் ஆகாதது இல்லை என்பர்.

இவர்கள் தன்னலவாதிகளாக இருந்தாலும் தன்னைப் போல பிறரும் உயரவேண்டுமென்ற நல்ல மனமுடையவர். பிறர் நலனுக்கும் பாடுபடத் துணிந்தவர்களாகவும் இருப்பர். பிறருக்கு நன்மை செய்யும் வகையிலும் அதனால் தாமும் ஆதாயம் பெறுவர்.

இவர்கள் கருத்தைப் பிறர் ஏற்க வேண்டுமென்று வற்புறுத்துவர். பிறர் தம்மை எதிர்க்க வந்தால் கோபத்திற்கு உள்ளாவர்.

எத்தகைய எதிர்ப்புக்களையும் எதிர்த்துப் போராடும் துணிவு மிக்கவர்களாக இவர்கள் இருப்பர்.

இவர்கள் சில நேரங்களில் தம்மை எதிர்ப்பவர்களையும், விரோதிகளையும் சூழ்ச்சியால் அடக்கி விடுவர். இவர்களை எப்போதும் தனிமையில் காண முடியாது. நண்பர்கள் சூழ்ந்தே காணப்படுவர்.

### குடும்ப வாழ்க்கை

இவர்களுக்கு வாழ்க்கைத்துணை பொருத்தமானவர்களாகவும் அனுசரித்துப் போகக் கூடியவர்களகவும் அமைவர்.

இவர்களின் வாழ்க்கையில் எதிர்பாராத திடீர் முன்னேற்றம் உண்டாகும். இவர்களுக்கு குழந்தை பாக்கியத்திற்கும் குறைவிருக்காது.

### தொழிலும் வருமானமும்

இவர்கள் கலைத்துறையில் நாட்டம் கொண்டவர்களாகவும் அதனால் வருமானம் பெறுபவர்களாகவும் இருப்பர். இவைத் தவிர அழகு சாதனம், ஆடம்பரப் பொருட்களைத் தயாரித்தலோ விற்பனை செய்தலோ கூடும். இது தொடர்பில் கமிஷன் ஏஜெண்டுகளாகவோ அத்துறையில் பணிபுரிபவர்களாகவோ இருக்கக்கூடும்.

இவர்கள் வாழ்க்கையில் படிப்படியாக முன்னேற்றம் ஏற்படும். சில நேரங்களில் திடீரென்று பொருளாதாரத்துறையில் உயர்வும் அதனால் செழிப்பும் உண்டாகும்.

### ஆரோக்கிய நிலை

இவர்களுக்கு உஷ்ண சம்பந்தமான காய்ச்சல், இரத்தக் கொதிப்பு, மூலநோய் போன்றன உண்டாகும். இவை தவிர மூட்டு வலி கை, கால் பிடிப்பு போன்றனவும் ஏற்பட வாய்ப்புள்ளது. அதிகமான உடலுறவு கொள்வதால் நரம்புத்தளர்ச்சியும் அது சம்பந்த நோய்களும் ஏற்படக்கூடும்.

### சாதக, பாதக எண்களும் திகதியும்

இவர்கள் சுக்கிரன், செவ்வாய் ஆதிக்கத்திற்குட்பட்ட 6,9 அது தொடர்புடைய யோக பலனளிக்கவல்ல எண்களும் தம் பெயரை அமைத்துக் கொள்ளலாம்.

தம் நிறுவனங்களுக்கும் 6,9 தொடர்புடைய எண்களும் திகதியும் யோகப் பலன் அளிப்பவை.

ஆனால் குருவின் ஆதிக்கத்திற்குட்பட்ட 3 அது தொடர்புடைய எண்களும் திகதியும் யோகமற்றவை.

### பெயர் அமைக்க கவனிக்க வேண்டியவை

இதுவரை பிறந்த எண் 6 க்கு விதி எண் 1 முதல் 9 வரையிலான பலன்களைக் கண்டோம்.

பிறந்த எண்ணுக்கு விதி எண் நட்பாக இருக்குமானால் இதுவரை கூறப்பட்ட பலன்கள் நடக்கும். பகையாக இருக்குமானால் பலன்களிலும் நிச்சயமற்ற தன்மை காணப்படும்.

அந்த நிலையில் தான் இரண்டு எண்களுக்குப் பொருத்தமான யோகப்பலன் தரும் எண்களுக்கு அமைத்துக் கொள்வதால் நற்பலன்களைப் பெறக்கூடும்.

இரண்டு எண்களும் ஒன்றுக்கொன்று பகையாக இருக்கும் நிலையில் இவர்களுக்கு நல்ல பலனளிக்கும் எண்கள், திகதியையும் பாதக பலனளிக்கும் எண்கள் திகதியையும் வரையறுத்துக் கூறமுடியாத இக்கட்டான நிலை ஏற்படவும் கூடும்.

அந்த சந்தர்ப்பங்களில் அவர்களின் நடைமுறை வாழ்க்கையில் அதுவரை நடந்த நல்ல நிகழ்ச்சிகள், கெட்ட நிகழ்ச்சிகளைக் குறித்து அதில் நல்லது நடந்த எண்கள் (பாஸ் செய்த சர்டிபிகேட் எண், அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டர் எண், திருமண நாள் போன்றனீ) மற்றும் திகதியை நல்ல பலனளிக்க வல்லவை என்றும், அதைப் போன்று தீய நிகழ்ச்சி நடந்த எண்களும் திகதியும் யோகமற்றவை என்றும் நிச்சயிக்கலாம்.

இதுவரை கூறப்பட்ட மன, குணவியல்பு, குடும்ப வாழ்க்கை போன்றவற்றில் தீயதாக இருப்பின், பிறவி எண், விதி எண்ணுக்குப் பொருந்தும் பெயர் அமைத்துக் கொள்ள அதனால் ஏற்படும் கொடிய பலன் தவிர்க்கப்படும்.

ஒவ்வோர் எண்ணுக்குரியவருக்கும் கூறப்பட்டுள்ளவை அவர்களுக்குப் பொருந்தக் கூடிய தொழில்கள், அவர்களுக்கு பெயர் எண், பிறவி மற்றும் விதி எண்ணுக்குப் பொருத்தமாக யோகமுள்ளதாக இருப்பின் தொழிலில் முன்னேற்றமும், பொருளாதாரத்தில் செழிப்பும் பெறலாம்.

ஒரு சிலர் தமக்குப் பொருந்தாத தொழிலில் ஈடுபட்டிருப்பாரேயானால் அவர்கள் பொருந்தும் தொழிலுக்கு தம்மை திருப்பிக் கொண்டு முன்னேறலாம்.

ஆரோக்கியக்கேடு இயல்பாக ஏற்படக் கூடியதே. தம் பெயரை பொருத்தமுள்ளதாக அதிர்ஷ்டமாக அமைத்துக் கொண்டால் நோய் ஏற்பட்டால் அதனால் பெருமளவு பாதிப்பின்றித் தவிர்க்கப்படலாம்.

**இனி பெயரை அமைத்துக் கொள்வதில் கவனிக்க வேண்டிய முக்கிய அம்சங்களை ஆராய்வோம்.**

பிறந்த எண் 6 ஆகக் கொண்டவர்கள் அசுர குருவான சுக்கிரனின் ஆதிக்கத்திற்குட்பட்டவர்கள். சுக்கிரன் யோகமளிக்கவல்லவன்.

அதனால் இந்த எண்காரர்கள் 6 ஆதார எண் வரக்கூடியனவற்றில் யோகப் பலன் தரும் எண்களிலும் பெயரை அமைத்துக் கொள்ளலாம். இவர்களுக்கு மேன்மையைத் தரும்.

ஆனால் விதி எண் 3 ஆகக் கொண்டவர்கள் குருவின் ஆதிக்கம் பெறுகிறார்கள். இவர்கள் மட்டும் 6 எண்ணை கட்டாயம் தவிர்க்க வேண்டும்.

இவர்களுக்கு கெடுதலளிக்கவல்ல எண் எது என்றும் திட்டவட்டமாகக் கூற இயலாது. இவர்களின் அனுபவத்தில் எந்த எண் பொருந்துமோ அதற்கு தம் பெயரை அமைத்துக் கொள்ளலாம்.

இருந்தாலும் விதி எண் 3 ஆகக் கொண்டவர்களுக்கு சூரியன், செவ்வாய் ஆதிக்கம் பெற்ற 1,9 எண்களுக்கு தம் பெயரை அமைத்துக் கொள்ள யோகமாக இருக்கும்.

இவர்கள் மட்டுமன்றி விதி எண் 1,4,6,7,8 ஆகக் கொண்டவர்களுக்கு 1 எண் நன்மை தரும். விதி எண் 6,9 காரர்களுக்கு 9 நன்மையைத் தரும்.

ஆனால் விதி எண் 1 முதல் 9 வரை எந்த எண்காரர்களும் குருவின் ஆதிக்கம் பெற்ற 3 இலும் அது தொடர்புடைய யோகப் பலனளிக்கும் எண்களாக இருந்தாலும் அதை முற்றிலும் விலக்குவது நல்லது.


அதனால் பிறந்த எண் 6 எண்காரர்களில் விதி எண் 3இனைத் தவிர மற்றவர்கள் 6 எண்களுக்கு பெயர் அமைத்துக் கொள்ள யோகமாக இருக்கும்.

விதி எண் 3 காரர்கள் 1 அல்லது 9 இல் பெயர் அமைத்துக் கொள்ள அதிர்ஷ்டமாகும். வாழ்க்கையில் முன்னேற்றம் சந்தோஷம் பெருகும்.

(தொடரும்)

# முக்கிய பதவிகளில் அமர்த்தப்பட்டவர்கள் நாட்டுக்கு துரோகம் இழைத்து வருகின்றனர்

## ஜனாதிபதி



(கொழும்பு)

சிலரை முக்கிய பதவிகளில் அமர்த்தியதன் மூலம் தாம் தவறிழைத்து விட்டதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட முதலாவது தடவை சில பொருத்தமற்ற நபர்களை உயர் பதவியில் அமர்த்தியதாக அவர் ஒப்புக் கொண்டுள்ளார்.

தேசப் பற்றாளர் என நம்பி பதவிகளில் அமர்த்தப்பட்ட சிலர் சுய இலாபநோக்கத்தை முதன்மையாகக் கொண்டு நாட்டுக்கு துரோகம் இழைத்து வருவதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

எனினும், இவ்வாறு உயர் பதவிகளில் அமர்த்தப்பட்டவர்களின் பெயர் விபரங்களை ஜனாதிபதி அம்பலப்படுத்தவில்லை.

சிலரை உயர் பதவிகளில் அமர்த்துவது குறித்த தமது தீர்மானம் பிழையானதென தற்போது உணர்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற விழா ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும், தமது நிர்வாகத்தின் கீழ் கடமையாற்றும் பெரும் எண்ணிக்கையிலான உத்தியோகத்தர்கள் மிகவும் நேர்மையான முறையில் தேசப்பற்றுடன் செயற்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச நாணய நிதியக் கடன் மற்றும் ஜீ.எஸ்.பி.பிளஸ் வரிச் சலுகைத் திட்டம் போன்றவை இலங்கைக்கு கிடைக்கக் கூடாது என்ற நோக்கில் எதிர்க்கட்சிகள் செயற்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார். (ஓ-4)

# தேர்தல் காலங்களில் ஊடகங்கள் எவ்வாறு செயற்பட வேண்டும்

## தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

(கொழும்பு)

தேர்தல் காலத்தில் ஊடகங்கள் செயற்பட வேண்டிய முறைமை குறித்த ஒழுக்கவிதிகள் அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கமைவாக அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் குறித்த 21 நிபந்தனைகளை தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

அதில் அரச மற்றும் தனியார் ஊடகங்களின் செயற்பாடுகள் தொடர்பில் தேர்தல் ஆணையாளர் கண்காணிக்க உள்ளதாகவும், அதன் பின்னர் தகுதி வாய்ந்த அதிகாரியை நியமிப்பது குறித்த தீர்மானம் எடுக்கப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை ஊடகங்களின் நடவடிக்கைகள் குறித்து கண்காணிக்கப்பட்டு பக்கச் சார்பாக செயற்படும் ஊடகங்களுக்கு எதிராக சட்ட நடவ்டிக்கை எடுக்கப்படும் எனவும் தேர்தல் சட்டங்களை மீறிச் செயற்படும் ஊடகங்களுக்கு எதிராக எவ்வாறான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது தொடர்பில் சட்ட மா அதிபர் மொஹான் பீரிஸ் ஆலோசனை வழங்குவார் எனவும் குறிப்பிடப்படுகிறது.

எந்தவொரு அரசாங்க மற்றும் தனியார் ஊடகமும் ஒரு பக்கச் சார்பாக செயற்படக் கூடாது எனவும் கட்சிகளுக்கோ வேட்பாளர்களுக்கோ எதிராக சேறு பூசக்கூடாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி, பிரதமர் மற்றும் ஆளும் கட்சி அமைச்சர்கள் உள்ளிட்ட அனைவரினது கருத்துக்களும் அவர்களது அரசியல் கட்சிகளின் கருத்தாகவே கருதப்பட வேண்டுமெனவும் மாறாக ஆளும் கட்சி அமைச்சர்களுக்கு விசேட சலுகைகள் வழங்கப்படக்கூடாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.


அத்தோடு தேர்தல் நடைபெறும் தினத்திற்கு 48 மணித்தியாலங்களுக்கு முன்னதாக சகலவிதமான ஊடகப் பிரச்சார நடவடிக்கைகளும் நிறுத்தப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். (ஓ-6)

# முக்கிய பிரச்சினைகள் குறித்து தேர்தலில் கவனம் செலுத்தப்படவில்லை

## விமல் வீரவன்ச

(கொழும்பு)

முக்கிய பிரச்சினைகள் குறித்து தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் கவனம் செலுத்தவில்லை என ஜே.என்.பி கட்சியின் தலைவர் விமல் வீரவன்ச விசனம் வெளியிட்டுள்ளார்.



பொதுமக்கள் எதிர்நோக்கி வரும் முக்கியமான பிரச்சினைகள் புறந்தள்ளப்பட்டு வேறு பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்கம் யுத்த வெற்றியை முன்னிலைப் படுத்தியும் எதிர்க்கட்சிகள் நிறைவேற்று அதிகாரத்தை இல்லாதொழிப்பதனை முன்னிலைப்படுத்தியும் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கல்வி முறைமையில் எவ்வாறான சீர்திருத்தங்களை முன்னெடுக்க வேண்டும், நாட்டை எவ்வாறு அபிவிருத்திப் பாதைக்கு இட்டுச் செல்ல முடியும் போன்றவை தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படவேண்டுமெனவும் விவசாய மற்றும் கைத்தொழில் உற்பத்தியை ஊக்குவிப்பது குறித்து அதிக கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்றத் தேர்தல் முறைமையில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டியது மிகவும் இன்றியமையாதென அவர் சுட்டிக்காட்டியுள்ளதோடு தற்போதைய பாராளுமன்றத் தேர்தல் முறைமை மிகவும் சர்ச்சைக்குரியதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது நடைமுறையில் உள்ள பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட வேண்டுமாயின் அதிக பணம் தேவைப்படுவதாகவும் இவ்வாறு அதிக பணத்தை செலவிட்டு அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளும் நபர்கள் அந்தப் பணத்தை வேறு வழிகளில் மீளப் பெற்றுக்கொள்ள முனைவதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார். இதன் காரணமாகவே நாட்டில் அதிகளவு ஊழல் மோசடிகள் இடம்பெறுவதாக அவர்தெரிவித்துள்ளார். (ஓ-2-4-9)

# ஐ.நா.வின் கடிதத்தை கவனமாக பரிசீலிக்கின்றது அரசாங்கம்

## -ஜனாதிபதி செயலகம் தகவல்-

சரத் பொன்சேகாவின் குற்றச்சாட்டு தொடர்பான ஐக்கிய நாடுகளின் விசேட அறிக்கையாளரின் கடிதத்துக்கு உத்தியோ கபூர்வ பதில் அனுப்புவது மற்றும் தேவையான நடவடிக்கை எடுப்பது தொடர்பாக தீர்மானிக்கும் முன்னர் அக்கடிதம் தொடர்பாக அரசாங் கம் கவனமாக பரிசீலித்து வருவதாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஓய்வு பெற்ற சரத் பொன்சேகா கடந்த 13ஆம் திகதி சன்டே லீடர் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் கூறியிருந்த குற்றச்சாட் டுகள் தொடர்பாக விசாரணை நடத்துவதற் கான நடவடிக்கைகளை ஐக்கிய நாடுகள் சபை ஆரம்பித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் நீதி விசாரணைக்குப் புறம்பான உடனடி மற்றும் விசாரணையின்றி மேற்கொள்ளப்படும் மரண தண்டனை விவகாரங்களுக்கு பொறுப்பான விசேட அறிக்கையாளர் பிலிப் அல்ஸ்டன் ஜனாதிபதிமகிந்த ராஜபக்ஷவுக்கு கடித மொன்றை அனுப்பியுள்ளார்.

சரணடைந்தவர்களை சுடுமாறு இலங்கை இராணுவத்தின் 58 ஆவது படைப் பிரிவின் கட்டளை அதிகாரிக்கு பாதுகாப்பு செயலாளர் உத்தரவிட்டதாக கூறப்படும் குற்றச்சாட்டு தொடர்பாக விளக்கமளிக்குமாறு அக்கடிதத்தில் அவர் கேட்டிருக்கிறார்.

நடேசன், சீவரட்ண புலித்தேவன், ரமேஸ் ஆகிய மூன்று புலி இயக்க உறுப்பினர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் 2009 மே. 17 ஆம் 18 ஆம் திகதி இரவு மரணமுற்ற சூழ்நிலை தொடர்பாகவே ஐக்கிய நாடுகள் சபை விசாரணை செய்கிறது.

தனக்கு கிடைத்துள்ள தகவல் மேற் குறிப்பிட்ட பேட்டியில் சரத் பொன்சேகா விடுத்த குற்றச்சாட்டுக்களின் அடிப்படையிலேயே அமைந்துள்ளதாக தனது கடிதத்தில் பிலிப் அல்ஸ்டன் குறிப்பிட்டுள்ளார். அத் துடன் நடேசன், புலித்தேவன், ரமேஸ் மற்றும் அவர்களது குடும்பத்தினர் உயிரிழந்த சூழ்நிலை தொடர்பாக விடுக்கப்பட்ட குற்றச்சாட்டுகளில் சிலவற்றை 58ஆவது படைப்பிரிவுடன் அப்போது இருந்து வந்த ஊடகவியலாளர்களின் கூற்றுக்கள் உறுதி செய்வதாகவும் அவர் தனது கடிதத்தில் கூறியுள்ளார்.

அனைத்து ஆயுத மோதல்களுக்கும் பொருத்தமான சர்வதேச மனிதாபிமான சட்டம் மற்றும் மனித உரிமைகள் சட்டம் குறிப்பாக 1949 இன் ஜெனீவா ஒப்பந்தத்தின் 5 ஆவது ஷரத்தை சுட்டிக்காட்டும் ஐக்கிய நாடுகளின் விசேட அறிக்கையாளர் தனது கடிதத்தில் குற்றச் சாட்டுகளின் சரியான தன்மை பற்றி கேட்டுள்ளதுடன் அக் குற்றச் சாட்டுக்கள் சரியானவை அல்ல என்று கூறு மிடத்து அது பற்றிய தகவல் மற்றும் ஆவண சான்றுகளையும் கேட்டுள்ளார்.

அத்துடன் நடேசன், புலித்தேவன் மற்றும் ரமேஷின் குடும்ப அங்கத்தவர்கள் தொடர்பாக தகவல்களும் அக்கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளன. (ஓ-2-4)

# சிறுபான்மையினரின் வாக்குகளை ஜனாதிபதி இலகுவில் வெற்றி கொள்வார்

## -ஆர். யோகராஜன் நம்பிக்கை-

சிறுபான்மை கட்சிகள் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது அர்த்தமற்ற செயலாகுமென இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பேச்சாளர் ஆர். யோகராஜன் தெரிவித்துள்ளார்.

சுயாதீனக் குழுக்களோ அல்லது சிறுபான்மை கட்சிகளோ ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பாதிப்புக்களை ஏற்படுத்த முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.


எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் நோக்கில் வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ள சில வேட்பாளர்கள் விரைவில் ஜனாதிபதிக்கு ஆதரவளிப்பதாக அறிவிக்கக் கூடுமென அவர் எதிர்வு கூறியுள்ளார். இதே வேளை பிரதான தமிழ் முஸ்லிம் கட்சிகள் ஜனாதிபதிக்கு ஆதரவளிப்பதாக ஏற்கனவே உறுதியளித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மலையகத்தின் முக்கிய அரசியல் சக்தியான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் மலையக மக்கள் முன்னணி ஆகியன ஜனாதிபதிக்கு ஆதரவளிப்பதாகவும் அத்தோடு கிழக்கின் பிரதான அரசியல் சக்திகளும் ஜனாதிபதிக்கு ஆதரவளிக்கத் தீர்மானத்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். வடக்கில் அமைச்சர் டக்ளஸ் தேவன்ாந்தாவின் ஆதரவு ஜனாதிபதிக்கு கிடைக்கப் பெற்றுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

எனவே, பெருந்தொகையான சிறுபான்மை மக்களின் வாக்குகளை ஜனாதிபதி இலகுவில் பெற்றுக் கொள்வார் என ஆர். யோகராஜன் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (ஓ-2-4)

# முத்துக்களின் சமுத்திரம்

# ஆங்கிலக் கவிதை நூல்




திரு சு. மகேஸ்வரனின் ‘முத்துக்களின் சமுத்திரம்’ எனும் ஆங்கிலக் கவிதை நூல் 23.12. 2009 அன்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் வெளியிடப்படவுள்ளது. திரு. சு.மகேஸ்வரன் யாழ். இந்துக்கல்லூரியின் புகழ் பூத்த ஆங்கில ஆசிரியராவார். அவரது தனித்துவமான கற்பித்தல் முறையினாலும் ஆங்கிலப் புலமையினாலும் அவரை அறியார் யாருமில்லை என்று சொல்லக் கூடிய அளவிற்குப் பிரபல்யமானவர் அவருக்கே உரித்தான அவரது தனித்துவமான ஆங்கிலப் பேச்சுப் புலமையினால் யாழ் இந்துக் கல்லூரி மாணவர்கள் மாவட்ட, மாகாண, தேசிய மட்டப் போட்டிகளில் சாதனை படைத்து வருகின்றனர்.

மொழி என்பது ஒருவருடைய எண்ணங்களை, சிந்தனைகளை வெளிப்படுத்துகின்ற ஊடகமாகும் அந்த வகையில் திரு. சு. மகேஸ்வரன் தனது எண்ணங்களை சிந்தனைகளை தனக்கு மிகவும் பரீட்சியமான ஆங்கில மொழியிலே மிகவும் அழகாக வெளிப்படுத்தியுள்ளார். கவிதை என்பது ஒருவருடைய அனுபவங்களை அழகியல் உணர்வோடு அழகிய வடிவத்திலே வெளிப்படுத்துதல் ஆகும். இதற்கிணங்க திரு.சு. மகேஸ்வரன் அனுபவங்கள் தமக்கு ஏற்படுத்திய உணர்வுகளை மிகவும் அழகாக ஆங்கில மொழியிலே வெளிப்படுத்தியுள்ளார். அவருடைய நூலின் பெயருக்கேற்ப அவருடைய ஒவ் வொரு கவிதையும் முத்தாகவே காணப்படுகிறது.

‘முத்துக்களின் சமுத்திரம்’ எனும் நூலின் முன் அட்டையில் கீழ்வானில் கடலிலிருந்து எழுகின்ற சூரியனும் கடலிலிருந்து ஒளிர்கின்ற முத்துக்களுடன் வலம்புரிச்சங்கை ஏந்தியிருக்கின்ற கைகள் என்பன அவற்றிற்கே உரித்தான இயல்பான வர்ணங்களில் வரையப்பட்டுள்ளன. கடலிலிருந்து முத்துக்களை அள்ளிக் கொடுத்தல் என்ற பொருள் மிகவும் அற்புதமாக வெளிக் கொண்டு வரப்பட்டுள்ளது. பின் அட்டையில் நூலாசிரியரின் படத்துடன் அவரைப் பற்றிய தகவல்கள் சக ஆசிரியர் ஒரு வரால் தரப்பட்டுள்ளது.

நூலாசிரியர் தனது கவிதை முத்துக்களை தான் அன்றாடம் வணங்குகின்ற கடவுள் கணேசனுக்கும் தன்னை இயக்குகின்ற கல்வித் தெய்வம் சரஸ்வதிக்கும் சமர்ப்பித்திருப்பது அவர் தனது ஆசிரியத்துவத்தில் கொண்டுள்ள பற்றை சுட்டிக்காட்டுகிறது. மேலும் நூலில் தன்னை இவ்வுலகிற்களித்த தனது பெற்றோரின் படங்களை பிரசுரித்துள்ளது. நூலாசிரியரது சமூக கலாச்சார பண்பாட்டுப் பற்றை வெளிப்படுத்தி நிற்கின்றது.

திரு.சு.மகேஸ்வரம் தனது கவிதைகளில் சமயம், இலக்கியம், கலாச்சாரம், சமூகம், தனிமனித சுதந்திரம், நடைமுறை விடயங்கள் என பல்வேறு விடயங்களை விபரித் துள்ளார். அவர் தனது மொழிநடையில் பிரதேச மரபுச் சொற்களைப் பயன்படுத்தி அவற்றிற்கு உயிர் கொடுத்துள்ளார். அவரது உணர்வு வெளிப்பாடுகள், சமூக அநீதிகள், வறுமை, தத்துவம், அழகியல் என்பவற்றின் அடித்தளத்திலிருந்து முகிழ்த்திருக்கின்றன. அவரது கவிதைகள் காலத்தின் வெளிப்பாடாகவும் பிரதேசத்தின் உணர்வுகளைப் பிரதிபலிப்பனவாகவும் காணப்படுகிறன.

போர்ச்சூழலினால் சிதைவுற்று சின்னாபின்னப்பட்டுப்போன எமது மக்களின் வாழ்க்கை உணர்வுகள், அழிவுகள், இழப்புகள் என்பன உலகெங்கும் தெரியப்படுத்தப்பட வேண்டும். அவை எழுத்துக்களில் வடிக்கப்பட்டு வரலாற்றுப் பதிவுகளாக்கப்பட வேண்டும். இது இன்றைய கால கட்டத் தேவையாகும். திரு. சு. மகேஸ்வன் அதற்கான அடித்தளத்தினை இட்டுள்ளார். அவரது முயற்சியை வெற்றி அடையச் செய்வது எமது கடமையாகும்.

திரு. சு.மகேஸ்வரனின்
The Ocean of the Pearls
புத்தக வெளியீட்டு நிகழ்வு சிறப்புற
வாழ்த்துகின்றோம்.

C.I.C
பெயின்ற் வகைகளின் சாம்ராஜ்யம்
சிவன் மோட்டோர்ஸ்
70/1 மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2763

KINGSTAN ELECTRONICS COMPLEX
No 62/31, Stanley Road, Jaffna
T.P.: 021 222 3140

மயூரா அன்பளிப்பு அகம்
14, நவீன சந்தை
மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2084

ஆறுமுகம் ரெக்ஸ்ரைல்ஸ்
20, பெரியகடை
யாழ்ப்பாணம்.

சீமாட்டி ஜவுளி சமுத்திரம்
15, Power House
Jaffna
T.P.: 021 222 2196

அப்லோ கண் வைத்திய நிலையம்
16, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 3305

# காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில்

## திருவெம்பாவை உற்சவம் இன்று ஆரம்பம்

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத் தில் இன்று மார்கழி திருவெம் பாவை உற்சவம் ஆரம்பமாகி ஒன் பதாம் நாள் பஞ்சரத பவனியும் அன்றிரவு நடேசர் ஆர்த்திரா அபி ஷேகமும் உதயத்தில் தரிசனமும் அன்று மாலையில் திருவூடலும் தீர்த்தமும் நடைபெறும்.

காலை திருப்பள்ளி எழுச்சி பூசையுடன் ஆரம்பமாகி தொடர்ந்து மூலமூர்த்திகளிற்கு அபிஷேகமும் நடைபெற்று காலைப் பூசையோடு மாணிக்க வாசகருக்கு பூசை இடம் பெற்று நடராசப் பெருமான் எழுந் தருளி இருக்கின்ற சபா மண்டபத் தில் அவர் முன்னிலையில் திரு வெம்பாவை ஓதுதல் நடைபெறும்.


மாணிக்க வாசகப் பெருமான் உள்வீதி உலா வந்த பின்னர் சௌந் தராம்பிகா சமேத சுந்தரேஸ்வரப் பெருமானிற்கு வசந்த மண்டபத் தில் பூசை நடைபெற்று பரிவார மூர்த்திகளுடன் இரண்டாம் வீதி உலா வருவார்.

மாலைப் பூசையுடன் மாணிக்க வாசகப் பெருமானிற்கு பூசை இடம்பெற்று திருவெம்பாவை ஓதப் பட்டு மாணிக்கவாசகப் பெருமாள் உள்வீதி உலா வருவார்.

திருவெம்பாவைக் காலங்களில் கோவில் ஸ்தாபகர் அம்பலவி முரு கர் கையால் எழுதப்பட்ட திருவாசக ஏடு நடராசர் பூசையில் வைத்த பின்னர் மாணிக்கவாசகப் பெரு மான் முன்னிலையில் அவ்வேடு வைக்கப்பட்டு திருவெம்பாவை ஓது கின்ற வழக்கம் பண்டு தொட்டு இன்றுவரை இருந்து வருகிறது.

இந்த பத்து நாட்களும் காலை மாலை ஒருவரே திருவெம்பாவை ஓதி வருவார்.

# ஈழத்துச் சிதம்பரத்தான் திருவடிக்கு...



புனரமைப்பு செய்யப்பட்ட ஆலய மண்டபம்

தில்லையிலே நிகழ்வு தொய்த் திண்ணரக்
கூத்தர் விழாத் திகழ்வதாலே
மல்லன் மிகு மிலங்கை நகர் வாழ் சைவ
மக்களெலாம் வருவர் நீங்கா
அல்லறவீர் கூத்தனருள் வடிவழகை
யாரவிழி அமையக் கண்டே
எல்லையிலாப் பேரின்ப வாரிதியிற்
நிறைந்துடிக ளோத்து வாரால்

ஈழத்துச் சிதம்பர புராணம்

இப்பகுதியில் தொடர்ந்து பாமாலை வெளிவரும்

# ஐரோப்பிய ஒன்றியத்துடன் மோதுவதன் மூலம் வரிச்சலுகையை பெற்றுக் கொள்ள முடியாது

## ரணில் விக்கிரமசிங்க



(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியத்துடன் மோதுவதன் மூலம் ஜீ.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை பெற்றுக் கொள்ள முடியாது என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

வரிச் சலுகைத் திட்டத்தை தொடர்ச்சியாக பாதுகாப்பதற்கே அரசாங்கம் அதிக முனைப்பு காட்ட வேண்டுமென அவர் சுட்டிக் காட்டி யுள்ளார்.

2005 ஆம் ஆண்டு முதல் குறித்த வரிச் சலுகைத் திட்டத்தை பாதுகாத்துக் கொள்ளுமாறு ஜனாதி பதியிடம் தாம் கோரிக்கை விடுத்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனநாயகத்தை நிலைநாட்டு தல், ஊடக சுதந்திரம், இடம்பெயர் மக்களுக்கு நிவாரணங்களை வழங்குதல் போன்றவை தொடர் பில் கூடிய கவனம் செலுத்தினால் ஜீ.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகைத் திட்டம் நிச்சயமாக இலங்கைக்கு நீடிக்கப்படும் என அவர் தெரிவித் துள்ளார்.

சலுகைத் திட்டம் ரத்து செய்யப் பட்டால் வழக்குத் தொடரப்படும் என்று அமைச்சர் ஒருவர் வெளி யிட்டுள்ள கருத்து ஏற்புடையதல்ல என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

உயர் நீதிமன்றிலோ அல்லது வேறு நீதிமன்றிலோ அரசாங்கம் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு எதிராக வழக்குத் தொடரத் தீர்மானித்துள் ளதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலக வர்த்தக மையத்திடம் இது குறித்து அறிவிப்பதன் மட்டுமே அரசாங்கத்திற்கு சந்தர்ப்பம் இருப் பதாகவும் இதன் மூலமே பாரியளவு சாதகமான பிரதிபலன்களை எதிர் பார்க்க முடியாது என அவர் தெரி வித்துள்ளார்.

வரிச் சலுகைத் திட்டம் நீடிக்கப் பட வேண்டுமாயின் ஜெனரல் சரத் பொன்சேகா பதவியில் அமர்த்தப் பட வேண்டுமென ரணில் விக்ரம சிங்க சுட்டிக் காட்டியுள்ளார்.

(ஓ-2-4)

# சிறுபான்மையினரும் நாட்டை ஆளும் அரசியல் பின்னணி உருவாக்கப்படவேண்டும்

## சரத் பொன்சேகா



தமிழர், முஸ்லிம்கள் உள்ளிட்ட சிறுபான்மை மக்களும் நாட்டை ஆட்சி செய்யக் கூடிய வகையி லான ஓர் அரசியல் பின்னணி உரு வாக்கப்பட வேண்டுமென ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

200 வருடங்களுக்கு பின்னர் கறுப்பினத்தவர் ஒருவர் அமெரிக்கா வின் அதிபராக தெரிவு செய்யப்பட் டதனைப் போன்று, இலங்கையி லும் தமிழ் முஸ்லிம்களுடன் ஆட்சி பீடமேற்கவேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

அனுராதபுரத்தில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட் டுள்ளார்.


இந்தப் பிரச்சினைக்கு பயங் கரவாதமோ அல்லது பிரிவினை வாதமோ தீர்வாக அமையாது என் றும் யுத்தம் தொடர்பான சகல கட்ட ளைகளையும் தாமே இட்டதாகவும், யுத்தம் வெற்றியடைந்த பின்னர் நாட்டில் உள்ள மின்கம்பங்களில் தங்களுடைய படங்களை சிலர் காட் சிப்படுத்தி தங்களை பிரபல்யப்படு த்த முயற்சி மேற்கொண்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யுத்த வெற்றியின் பின்னர் படைத் தளபதிக்கு வழங்கப்படவி ருந்த கலாநிதி பட்டங்களை வழங் கக் கூடாது என ஜனாதிபதி கடித மூலம் கொழும்புப் பல்கலைக்கழக நிர்வாகத்தினருக்கு அறிவித்ததாக ஜெனரல் சரத் பொன்சேகா தெரி வித்துள்ளார்.

(ஓ-2-4)

# ஜனாதிபதியின் தலைமைத்துவத்திற்கு எவரும் சவால்விட முடியாது

## கோத்தபாய தெரிவிப்பு



(கொழும்பு)

முப்படையினருக்கு தேவை யான தலைமைத்துவத்தை வழங்கி உள்நாட்டு வெளிநாட்டு அழுத்தங் களுக்கு சிறப்பாக முகம் கொடுத்து யுத்தத்தை வெற்றி கொள்ள வழி காட்டிய ஜனாதிபதியின் தலைமைத் துவத்துக்கு எவரும் சவால் விட முடி யாது என்று பாதுகாப்புச் செயலா ளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரி வித்தார்.

தாய் நாட்டுக்காக உயிர் நீத்த சிங்க ரெஜிமன்டைச் சேர்ந்த படைவீரர்களை கௌரவிக்கும் 21ஆவது நினைவு தின வைப வம் அம்பேபுஸ்ஸவில் உள்ள சிங்க ரெஜிமன்ட் தலைமையகத்தில் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரியவின் தலை மையில் நடைபெற்றது.

இதன் போது பாதுகாப்புச் செய லாளர் கோத்தபாய ராஜ பக்ஷ வின் விசேட செய்தியை இராணு வத் தளபதி வாசித்தார். இச்செய் தியிலேயே பாதுகாப்புச் செயலாளர் மேற்கண்டவாறு கூறியிருந்தார்.

அதில் மேலும் குறிப்பிட்டுள் ளதாவது, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவின் தலைமைத்துவம் மற் றும் வழிகாட்டலின்மூலம் முப்படை யினர் பொலிஸ் மற்றும் சிவில் பாது காப்புப் படையினரின் பலம், தைரி யம், அர்ப்பணிப்பு காரணமாக 30 வருட காலம் நிலவிய பயங்கர வாத யுத்தத்தை நிறைவுக்குக் கொண்டுவர முடிந்தது.

முப்படையினர் மற்றும் பொலி ஸாரை பலப்படுத்தி 80 ஆயிரமாக இருந்த இராணுவத்தின் ஆளணி பலத்தை முப்படைகளின் தளபதி யான ஜனாதிபதி கடந்த மூன்று வருட காலத் திற்குள் 2இலட்சத்து 20 ஆயிரமாக அதிகரித்ததுடன் களமுனை யிலுள்ள தளபதிகளுக் குத் தேவையான ஆளணியையும் பெற்றுக் கொடுத்தார்.

படையினருக்கும் கள முனைக் கும் தேவையான நவீன ஆயுதங் கள் உபகரணங்கள் மற்றும் வளங் களை பெற்றுக் கொடுத்து எந்த வித வெளிநாட்டு சக்திகளுக்கும் தலைசாய்க்காது செயற்பட்ட ஜனா திபதியின் உன்னதமான தலை மைத்துவத்தை கௌரவத்துடன் நினைவு கூர வேண்டும்.

இந்த யுத்தத்தை வெற்றிபெற முடியாது என்பதே வெளிநாட்டு நிபுணர்களினதும், தலைவர்களி னதும் கருத்தாக இருந்தது.

யுத்தக் கள வெற்றிகளை அவம தித்தவர்களும், இந்த நாட்டில் இருந்தனர்.

இதனையும் பொருட்படுத்தாது மனோ வலிமையுடன் தலைமைத் துவத்தையும் கட்டளையிடும் தள பதிகளுக்கு தேவையான சகல ஒத் துழைப்புக்களையும் உறுதியையும் ஜனாதிபதி வழங்கினார் என்றார்.

(ஓ-4)

# ஜனாதிபதி சவாலை வெற்றி கொண்டு ஒருமைப்பாட்டை நிலைநாட்டியவர்

## அமைச்சர் பந்துல குணவர்தன அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் பயங்கரவாதம் உச்ச நிலையில் இருந்தபோது ஆட்சி யைப் பொறுப்பேற்ற எமது ஜனாதி பதி மஹிந்த ராஜபக்ஷ குறுகிய காலத்துக்குள் அந்தச் சவாலை வெற்றி கொண்டு நாட்டின் ஒருமைப் பாட்டை நிலைநாட்டி அமைதியை ஏற்படுத்தினார் என வர்த்தக அபிவி ருத்தி கூட்டுறவு மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சர் பந்துல குண வர்தன தெரிவித்தார்.

பியகந்த போகுந்தர என்ற இடத் தில் நேற்று காலை பொருளாதார மத்திய நிலையம் ஒன்றுக்கான அடிக்கல் நாட்டப்பட்டது. இந்த வை பவத்தில் கலந்துகொண்டு உரை யாற்றும் போதே அமைச்சர் இவ் வாறு கூறினார். இங்கு அவர் மேலும் கூறியதாவது,

எதிர்வரும் ஜனாதிபதித் தேர் தலில் மஹிந்த ராஜபக்ஷ மக்க ளின் 70 சதவீத வாக்குகளைப்பெற்று மீண்டும் தெரிவு செய்யப்படுவார்.

அவர் ஜனாதிபதி ஆட்சிப் பொறு ப்பை ஏற்றபோது பயங்கரவாதம், எரிபொருள் விலை உயர்வு, உண வுப் பற்றாக்குறை, உலகப் பொரு ளாதார நெருக்கடி போன்ற நான்கு சவால்களை எதிர்நோக்கினார். எனி னும் தன் செயற்திறனால் அச்ச வால்களை வெற்றி கொண்டார்.

பொது மக்களுக்கு சலுகைகள் வழங்கும் நோக்கடனேயே நாட்டின் பல பாகங்களிலும் அரசாங்கம் பொருளாதார மத்திய நிலையங் களை உருவாக்கிவருகின்றது. இதன் மூலம் வறிய மக்கள் அதிக நன் மையடைவர் என்றும் அமைச்சர் மேலும் கூறினார்.

(ஓ-2-4)

# சர்வதேசத்தின் தாளத்திற்கு ஆடும் சரத் பொன்சேகா குழுவினர்



## விமல் வீரவன்ச

(கொழும்பு)

சர்வதேசத்தின் தாளத்திற்கேற்ப ஜெனரல் சரத் பொன்சேகா உட்பட அவரோடு இணைந்திருக்கும் குழுவினர் ஆடுகிறார்கள். ஆகையால் தான், இலங்கையில் ஆட்சி மாற்றமொன்று நிகழ்ந்தால் ஜீ.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை பெற்றுத்தருவதாக ஐரோப்பிய நாடுகள் தெரிவிக்கின்றன.

ஆனால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சர்வதேசத்தின் தாளத்திற்கேற்ப ஆடவில்லை என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் எம்.பி.யுமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்காகவே ஜெனரல் சரத் பொன்சேகாவை ஆதரிப்பதாக கூறும் ஜே.வி.பி அதன் மூலம் ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக்கி மனோகணேசன் மற்றும் ரவூப் ஹக்கீம் ஆகியோரின் எதிர்பார்ப்புக்களையும் நிறைவேற்றுவதற்கே முயற்சிக்கிறது எனவும் அவர் தெரிவித்தார்.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள தேசிய சுதந்திர முன்னணியின் காரியாலய கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் மேலும் அவர் கூறுகையில்,

இலங்கையில் ஆட்சி மாற்றம் ஒன்று இடம்பெற்றால் இலங்கைக்கான ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை பெற்றுக் கொடுக்கத் தயார் என ஐரோப்பிய சமூகம் கூறியதாக ஜே.வி.பி.யின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

இதனை ரணில் விக்கிரமசிங்க கூறியிருந்தால் அதில் பரஸ்பர விரோதமில்லை. ஏனென்றால் அவர்களுடைய கொள்கை அப்படியானது. ஆனால், சோமவன்ச கூறியிருப்பதானது அரசியல் சுய இலாபத்திற்கானதே என தெட்டத் தெளிவாக தென்படுகின்றது.

எமது நாடு ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை முழுமையாக அனுபவிக்கவில்லை. ஆகையால் எமது நாட்டிற்கு ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச் சலுகையானது சிலவேளை கிடைக்காமல் போனால் அதற்கான மாற்று வழிகளை நாம் வகுத்துக் கொள்ள வேண்டும் என்பதோடு அதனால் பாதிக்கப்படுவோருக்கு அரசாங்கத்தால் நிவாரணம் பெற்றுக் கொடுக்க முடியும்.

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையானது எமக்குத் தேவையான ஒன்றுதான். ஆனால், அந்த வரிச் சலுகையானது கிடைக்காத பட்சத்தில் எமது உற்பத்தி நடவடிக்கைகளை எமது நாட்டிற்கு ஏற்ற விதத்தில் அமைத்துக் கொண்டு சந்தை வாய்ப்புகளை பெற்றுக் கொள்ள வேண்டும். அதற்கான திட்டங்களையும் நாம் ஆராய்ந்து வருகின்றோம்.

நாட்டை கூறுபோடும் சக்திகளிடமிருந்து நாட்டை மீட்டெடுத்துள்ள இந்த அரசாங்கத்தின் மீது விமர்சனம் செய்யும் அளவுக்கு எதுவுமில்லை.

ஆனால் எதிர்க்கட்சியினருடன் இணைந்து கொண்டு சில அரசியல் சுய இலாபத்திற்காக அரசாங்கம் ஊழல், மோசடி செய்வதாக கூறுகிறார்கள்.

முடியுமாக இருந்தால் இவர்கள் கூறும் ஊழல், மோசடிகள் தொடர்பாக ஆதாரங்களுடன் நிரூபித்துக் காட்டப்படும்.

(ஓ-2-4)

## பிள்ளையான், கருணா முறுகல்நிலை ஜனாதிபதியால் தீர்த்து வைப்பு

(கொழும்பு)

கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தனுக்கும், தேசிய நிர்மாண அமைச்சர் விநாயகமூர்த்தி முரளீதரனுக்கும் இடையில் காணப்பட்ட கருத்து முரண்பாடுகளை ஜனாதிபதி தீர்த்து வைத்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேரடியாகத் தலையீடு செய்து இரு தரப்பினருக்கும் இடையில் காணப்பட்ட கருத்து முரண்பாடுகளை களைவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக கிழக்கு மாகாண அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்துள்ளார்.

இனிவரும் காலங்களில் குறித்த இரண்டு தரப்பினரும் கூட்டாக இணைந்து ஜனாதிபதிக்காக தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளை முன்னெடுப்பார்கள் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கருணாவை பட்டிருப்பு பகுதியில் பிரச்சாரங்களை மேற்கொள்ளுமாறும் பிள்ளையானை மட்டக்களப்பு பகுதியில் பிரச்சாரங்களை மேற்கொள்ளுமாறும் ஜனாதிபதி வேண்டியுள்ளார். (ஓ-2)

# ஜனாதிபதி மீது மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர்

## நாமல் ராஜபக்ஷ

(கொழும்பு)

வாழ்வதற்கு சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்த ஜனாதிபதியின் மீது மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளதாக இளைஞர்களுக்கான எதிர்காலம் அமைப்பின் தலைவரும் ஜனாதிபதியின் புதல்வருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாட்டு மக்களுக்கு ஆற்றிய சேவைகளுக்கு நன்றி பாராட்டக்கூடிய ஓர் அரிய சந்தர்ப்பம் இந்தத் தேர்தலில் உருவாகியுள்ளதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாத்தறையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டியதன் பின்னர் பொருளாதார அபிவிருத்தி தொடர்பில் ஜனாதிபதி கூடுதல் கவனம் செலுத்துவார் என அவர் தெரிவித்துள்ளார்.

அத்தோடு யுத்தத்திற்கு பயன் படுத்தப்பட்ட பணம் நாட்டின் அபிவிருத்திக்காக பயன்படுத்தப்படும் என்றும் தகுதிக்கு ஏற்ற வகையிலான தொழில்களை வழங்குவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை மேற்கொள்வார் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஓ-2-4)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

### உத்தாமணி / வேலிப்பருத்தி

Botanical Name- Pergularis daemia
Family - Asclepiadaceae
Engl - Dog's bane white jow plant
Sinh - Meda - hangu

பல்லாண்டு காலம் வளரக்கூடிய ஏறு கொடித் தாவரமாகும். இச்செடியை கசக்கும் பொது ஒருவித மணம் வீசும். இலைகளை ஒடிக்கும் போல் பால் சுரப்புத் தன்மையைக் கொண்டது. தண்டுகளில் உரோம அமைப்புகளைக் கொண்டது. இலைகள் தனியிலை, எதிரிலை அடுக்கும் மெல்லியதாகவும் 5-10 செ.மீ நீளமுடையது.

இதயவடிவானது (cordate) இலைகளின் இரு பக்கங்களும் மென்மையான உரோம அமைப்பைக் கொண்டது. ஒழுங்கான, இருபாலான பூக்கள் அல்லிகள் 5, புல்லிகள் 5, குழாயுருவானவை. (Funnel - shaped) பழங்கள் - 5-6.2 செ.மீ நீளமுடையது. மென்மையான முட்களைக் கொண்டது. (Soft spines)

**இனவிருத்தியும் பரம்பலும்**

இதன் காய் முற்றியவுடன் வெடிக்கும். அதனுள் இருக்கும் விதை ஒவ்வொன்றிலும் சிலிர்க்கும் பஞ்சுக்கம்பி இருக்கும், அதன் மூலம் அவ்விதைகள் காற்றிலே பறந்து சென்று, வேலியோரங்களிலும், முட்புதர்களிலும் விழுந்து தம் இனத்தை பெருக்குகின்றன. அதனால் தான் இந்த மூலிகையை வேலிப்பருத்தி என்கிறார்கள். வெப்பமான பிரதேசங்களில் தான் இதன் பரம்பல் அதிகம் காணப்படும்.

**மருத்துவப் பயன்கள்**

◆ உத்தாமணியின் பாலை வீக்கங்களின் மீது பூசினால் அவை வற்றிவிடும். சிலர் மூட்டுவலி, கீல்வாதம், முடக்குவாதம், இடுப்புவலி முதலிய நோய்களால் அவதிப்படுவோர் வேலிப்பருத்தி இலைகளை சிதைத்து வாயகன்ற சட்டியிலிட்டு வதக்க வேண்டும். அதை நோயாளியினால் தாங்கிக் கொள்ளும் அளவு சூட்டில் ஒற்றடம் கொடுத்து வந்தால் மேற்கூறிய வலிகள் தணியும்.

◆ உத்தாமணி இலைகளை சேகரித்து நன்றாக கழுவி சுத்தம் பார்த்து கைப்பிடி



யளவு எடுத்து ஒரு சட்டியில் போட்டு ஒரு டம்ளர் நீர்விட்டு அடுப்பில் வைத்து நன்றாக கொதிக்க வைத்து வடிகட்டி இரவு சாப்பாட்டின் முன் 3 நாட்களுக்கு கொடுத்து வந்தால் வயிற்றிலுள்ள கீரைப்பூச்சிகள் அழிந்து விடும்.

◆ உத்தாமணி இலைகளை நைத்து இடித்து சாறு எடுத்து அதை வீக்கமுள்ள இடத்தில் கனமாக பூசிவந்தால் எந்த வகையான வீக்கமானாலும் தணிந்து விடும்.

◆ அடிக்கடி ஏற்படும் வயிற்றுவலிக்கு உத்தாமணியிலைச் சாறு ஒரு தேக்கரண்டி, தேன் ஒரு தேக்கரண்டியளவு சேர்த்து காலையில் மட்டும் 3 நாள் கொடுக்க குணமாகும்.

◆ குழந்தைகட்கு ஏற்படும் சளிக்கு இலைச்சாறு 2-3 துளி பால் 15 மில்லி கலந்து கொடுக்க குணமாகும். ஆமணக்கு நெய்யில் 2-3 துளி இலைச்சாறு மசித்து கொடுத்தாலும் வயிற்றிலுள்ள கீரிப்பூச்சிகள் அழியும்.

◆ மாதவிடாயின் போது ஏற்படும் வயிற்றுவலி, இடுப்புவலிக்கு உத்தாமணி இலைச் சாறு 10 மில்லியுடன் தேன் 10 மில்லி கலந்து கொடுத்து வெந்நீர் அருந்த வலி நிற்கும்.

◆ இலைச்சாறு 100 மில்லி எள்நெய் 100 மில்லி சேர்த்து சாறு சுண்டக்காய்ச்சி வடித்து வைக்கவும். இதில் 5 மில்லி உள்ளுக்கும் கொடுத்து, மேற்பூச்சாகவும் மூட்டுவலிக்கு பயன்படுத்தலாம்.

◆ உத்தாமணிப் பூக்களையும், இலைகளையும் சேகரித்து சுத்தம் செய்து சாறு எடுத்து சமஅளவு தேன் கலந்து காலை, மாலை அருந்த ஆஸ்மா தணியும்.

**உத்தாமணிக்கன்னி மிளகுச்சூரணம்**

◆ ஓர் அகன்ற பீங்கான் தட்டில்.தேவையான அளவு கொட்டி மிளகைக் கொட்டிப் பரவலாகப் பரப்ப வேண்டும். மிளகுகள் மூழ்கும் அளவுக்கு உத்தாமணி இலைகளை இடித்து பிழிந்த சாற்றைத் தளர ஊற்ற வேண்டும். அதை 24 மணி நேரம் ஊற வைக்க வேண்டும். பின்பு வெயிலில் நன்றாக சாறு வற்றிப் போகும்படி காயவைக்க வேண்டும். மீண்டும் சாறுவிட்டு, மறுபடியும் காய வைக்க வேண்டும்.

இவ்வாறு மும்முறை செய்தபின்பு ஈரநைப்பு இல்லாமல், மிக நன்றாக உலர்ந்த மிளகை உரலில் இட்டு இடித்துத் தூளாக்கி அரித்து பத்திரப்படுத்திக் கொள்ளவும். குழந்தைகட்கு ஏற்படும் செரியாமை, பால் செரியாமல் தயிர்போல வாந்தி எடுத்தல், காய்ச்சல் போன்ற நிலைமைகளில் மேற்படி உத்தாமணிக் கன்னி மிளகுச் சூரணத்தை குழந்தைகளின் வயதிற்கு ஏற்றளவு 25. மி.கி இலிருந்து 50 மி.கி அளவு தேனில் குழைத்து காலை, மாலை கொடுக்கலாம்.


◆ ஏதாவது சிறிய விஷக்கடிகளுக்கு உத்தாமணி இலைச்சாறு 30-60 மில்லி அளவு கொடுக்கலாம்.

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S)
சிரேஷ்டவிரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை
யாழ்பல்கலைக்கழகம், கைதடி

# நாயக்கர் காசுகள்

84

இவனால் வெளியிடப்பெற்ற மற்றொரு வகைக் காசைடாக்டர் நாகசாமி தாம் குற்றாலத்தில் ஒருவரிடம்பார்த்ததாகவும், அக்காசில் முன் பக்கத்தில் பாண்டியன் என்று தமிழில்



எழுதப்பெற்றும் அதற்குக் கீழ்பகுதியில் இரு கயல்களும் பின்பக்கத்தில் விசுவநாதன் என்று தமிழிலும் எழுதப்பெற்றுள்ளதாகக் கூறியுள்ளார்.

தமிழகத்தில்சிறுவடிவிலான சில செப்புக் காசுகள் பெரும்அளவில் கிடைத்து வருகின்றன.இவற்றில் ஓரெழுத்து அல்லது ஈரெழுத்துக்களே காணப்படுகின்றன. இவ்வெழுத்துக்களைக் கொண்டு அண்மைக் காலத்தில் மதுரை நாயக்க மன்னர்கள் சிலரால்இஇவை வெயியிடப்பட்டிருக்கலாம் என்ற கருத்து கொள்ளப்பட்டிருக்கிறது.

வி என்று நகாரி எழுத்தில் ஒருவகையும் தெலுங்கு கன்னட எழுத்தில்மற்றொரு வகையும் எழுதப் பெற்றிருக்கும் காசுவீரப்ப நாயக்கராலும் சொ என்று தெலுங்கு கன்னட எழுத்தில் எழுதப்பெற்று காணப்படுவது சொக்க நாத நாயக்கரால் வெளியிடப்பட்டது என்றும் , தீ என்று தெலுங்கு எழுத்தில் எழுதப்பட்டிருப்பதும் திருமலை நாயக்கரால் வெளியிடப்பெற்றிருக்கலாமென்று ஊகிக்கப்பட்டிருக்கிறது.

தேசிகாச்சாரி தம் நூலில் ஒரு காசின் ஒளிப்படத்தைவெளியிட்டு அதில் கீழ்க்காணுமாறு காணப்படுவதாக எழுதியுள்ளார். முன் பக்கத்தில் மேடைமீதுபடுத்திருக்கும் காளை உருவமும்,பின்பக்கம் நான்கு சதுரங்களில் **மங்கம்மா** என்று தெலுங்கு எழுத்தில் எழுதப் பெற்றும் காணப்படுகிறது. இக்காசு மதுரையை ஆட்சி புரிந்தஇராணி மங்கம்மாவால் வெளியிடப்பட்டது என்று கருதப்படுகிறது.

**நாயக்கர் காசுகள்**

*செஞ்சி நாயக்கர் காசு*

முதலாம்கிருஷ்ணப்ப நாயக்கர்

(கி.பி.1567-1575)

1.முன்பக்கம் : இடப்பக்கம் திரும்பி நிற்கும் காளை

2.பின்பக்கம் :கிட்டிணப்ப நாயக்கர்என்று நான்கு வரிகளில் தமிழில்

**தஞ்சைநாயக்கர் காசுகள்**

*விசையரகுநாதன்*

(கி.பி.1600-1634)

1.முன்பக்கம் :திருமகள் அமர்ந்தநிலை

பின்பக்கம்:வி சையரகுநாதன் என்று நான்கு வரிகளில் தமிழில்

2.முன்பக்கம்:சிவன், பார்வதி அமர்ந்தநிலை

பின்பக்கம்: ரகுநாதன் என்று இரண்டு வரிகளில் நாகரியில்

3.முன்பக்கம்: தோரண வாயிலுக்குள் நாயக்கமன்னர்உருவம் நிற்கும் நிலை

பின்பக்கம் : கோவிந்தய்யர் என்று மூன்று வரிகளில் தமிழில்

**மதுரை நாயக்கர் காசு**

*விசுவநாதநாயக்கர்*

(கி.பி.1529-1564)

1.முன்பக்கம் : நிற்கும் மனித உருவம்

பின்பக்கம் : இருகயல் நடுவில் சாட்டை இடப்புறமிருந்து வலப்புறமாக விசுவநாதன் என்று தமிழில்.

2.முன்பக்கம் : இருகயல் இவைகளுக்கு மேல் பகுதியில் பாண்டிய என்று தமிழில்

பின்பக்கம் : விசுவாநாதன் என்று தமிழில்

*வீரப்ப நாயக்கர் (?)*

(கி.பி.1572-1595)

1.முன்பக்கம் : நிற்கும் மனித உரு வம், இடக்கரத்துக் கீழ் குறுவாள் போன்று தெரிகிறது.

பின்பக்கம் : நிற் கும் காளை, வி என்று நாகரி எழுத் தில்

2. முன்பக்கம் : நிற்கும் மனித உருவம்

பின்பக்கம் : நிற்கும் காளை ,காளைக்கு முன்பு சங்கும் வி என்று தெலுங்கு- கன்னட எழுத்தும்.

*சொக்கநாத நாயக்கர்*

(கி.பி. 1659-1682)

1.முன்பக்கம் : நிற்கும் மனித உருவம்

பின்பக்கம்: நிற்கும் காளை, காளையின் முன்பு சங்கு. காளைக்கு மேற்பகுதியில் சொ என்று தெலுங்கு-கன்னட எழுத்தில்

*திருமலைநாயக்கர் (?)*

(கி.பி. 1623-1659)

1.முன்பக்கம் : நிற்கும் மனித உருவம்

பின்பக்கம் : தீ என்று தெலுங்கு எழுத்தில் வலப்பக்கம் திரும்பிநிற்கும் காளை, முன்பக்கம் குறுவாள், மேற்பகுதியில் பிறைச்சந்திரன்

கலாநிதி **நடனகாசிநாதன்**


*மங்கம்மாள்*

(கி.பி.1689-1706)

1.முன்பக்கம் : மேடைமீதுபடுத்திருக்கும் காளை

பின்னபக்கம் : நான்கு சதுரங்கள், மங்கம்மாள் என்று சதுரங்களில்தெலுங்கில்.

(தொடரும்)



"விஜய நகரப் பேரரசும் கலாசார மறுமலர்ச்சியும்" ஆய்வுத் தொடரில் நாளை பேராசிரியர் சி. பத்மநாதனின் விஜய நகர கலைப்பாணி ஆய்வுக்கட்டுரை இடம்பெறும்.

# பின்ஸஸ் கிரிஸ்டினா கப்பல் புலிகளுக்கு சொந்தமானதா?

## நிரூபிக்குமாறு ஐ.தே.க. சவால்

(கொழும்பு)

பின்ஸஸ் கிரிஸ்டினா கப்பல் உண்மையில் புலிகள் அமைப்பிற்குச் சொந்தமானதா அல்லது வேறு நிறுவனத்திற்குச் சொந்தமான கப்பலா என்பது தொடர்பில் சாட்சியத்துடன் நிரூபிக்க வேண்டும் என்று நாம் அரசாங்கத்திற்குச் சவால் விடுக்கின்றோம் என்று ஐக்கிய தேசியக் கட்சி விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சியின் புத்தளம் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார அனுப்பிவைத்த ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

புலிகளுக்குச் சொந்தமான பின்ஸஸ் கிரிஸ்டினா என்ற கப்பலைக் கைப்பற்றி இலங்கைக்கு இழுத்து வந்துள்ளதாக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் பிரசாரம் அரசியல் இலாபத்திற்காகவும் ஜனாதிபதித் தேர்தலின் சுலோகம் என்பதைனயும் நாம் பொறுப்புடன் கூறிக்கொள்ள விரும்புகின்றோம்.

இந்தக் கப்பல் புலிகள் அமைப்பிற்குச் சொந்தமானதா அல்லது வேறு நிறுவனத்திற்குச் சொந்தமான கப்பலா என்பது தொடர்பில் சாட்சியுடன் நிரூபிக்க வேண்டும் என்று நாம் அரசாங்கத்திற்குச் சவால் விடுக்கின்றோம். அது மட்டுமன்றி இந்தோனேசியாவின் ஜகார்த்தா நகரில் இலங்கை கடற்படை அதிகாரியின் தலையீட்டுடன் இந்தக் கப்பல் பணம் கொடுத்து கொள்வனவு செய்யப்பட்டதாகத் தகவல் கிடைத்துள்ளன.

புலிகள் அமைப்பிற்குச் சொந்தமான விசாலமான 20 கப்பல்களும் 10 சிறிய கப்பல்களும் இருந்தமைக்கான தகவல்கள் ஊடகங்களில் வெளியாகி இருந்தன. அதில் மிக பெரிய கப்பலொன்று எமது படையினரால் அழிக்கப்பட்டுள்ளது. அப்படியாயின் எஞ்சியிருக்கும் கப்பல்கள் மூலமாக பெறப்படும் ஆதாயத்தை யார் பெற்றுக்கொள்கின்றனர் என்பது எம்முன் இருக்கின்ற பிரச்சினையாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஓ-2-4)

# கிளிநொச்சி பிரதேசத்தில் இதுவரை 2713 பேர் மீள் குடியேற்றம்

(வடமராட்சி கிழக்கு)

கிளிநொச்சி கரைச்சி பிரதே செயலகத்தைச் சேர்ந்த ஆயிரத்து 200 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 713 அங்கத்தவர்கள் இதுவரை மீள் குடியமர்த்தப்பட்டுள்ளனர். இதில் நான்காம் கட்டமாக 132 குடும்பங்களைச் சேர்ந்த 287 பேர் கடந்த திங்கட்கிழமை குடியேற்றப்பட்டனர்.

உருத்திரபுரம் கிழக்கு , உதயநகர் மேற்கு , உதயநகர் கிழக்கு , கனகபுரம் பெரியபரந்தன் ,ஜெயந்தி நகர், திருநகர் வடக்கு , திருநகர் தெற்கு ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் உள்ள மக்கள் இவ்வாறு குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

மேலும் குடியமர்த்தலில் 5ஆம் கட்டமாக நேற்று ஆயிரம் பேர் மீள் குடியமர்த்தப்படுவதற்காக வவுனியா நலன்புரி நிலையத்திற்கு அழைத்துவரப்பட்டுள்ளனர்.

இதேவேளை கிளிநொச்சி பகுதியில் மீளக் குடியமர்ந்தவர்களில் கர்ப்பிணித் தாய்மார்கள், கைக்குழந்தைகள் ஆகியோருக்கு ஏதாவது அரசசார்பற்ற தொண்டு நிறுவனங்கள் பால்மா வகைகளை கொடுத்து தவுமாறு மீள்குடியமர்வுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்ட பொறுப்பதிகாரி கிராம அலுவலர் வை.வைத்திஸ்வர மூர்த்தி கேட்டுள்ளார்.

தொடர் மழையிலும் மீள் குடியேற்ற நடவடிக்கைகளை துரித கதியில் நடத்துவதற்காக கிளிநொச்சி கிராம சேவையாளர் குழு ஒன்று கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் கிளிநொச்சி கச்சேரி , கரைச்சிபிரதேச செயலாளர் அலுவலகத்தில் தற்காலிகமாக இயங்கி வருகிறது எனவும் மீள் குடியேற்றத்திற்கு பொறுப்பான கிராம அலுவலர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ஓ-9-99)

# நாட்டு மக்கள் சுதந்திரமாக நடமாட வழிவகுத்தவர் ஜனாதிபதி மஹிந்தவே

## ஐக்கிய தொழிலாளர் சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

இந்த நாட்டில் முப்பது வருட காலமாக நிலவி வந்த கொடிய யுத்தத்திற்கு முடிபு கட்டி நாட்டு மக்கள் சுதந்திரமாக நடமாட வழி வகுத்தவர் ஜனாதிபதி மஹந்த ராஜபக்ஷவேயாவார். தமிழர்களைக் கௌரவப்படுத்தும் வகையிலேயே அவர் செயற்படுகின்றார். இவற்றை காரணமாகக் கொண்டே நாம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை ஆதரிக்க முடிபு செய்துள்ளோம் என்று ஐக்கிய தோட்டத் தொழிலாளர் சங்க பொதுச் செயலாளர் எம். முத்துலிங்கம் தெரிவித்தார்.

பதுளையிலுள்ள அவரது காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,

ஜனாதிபதிமஹிந்த ராஜபக்ஷமூன்றாம் நாடுகளுடன் கூடிய தொடர்புகளை வைத்திருப்பதால்மேற்குலக நாடுகள் எமது ஜனாதிபதி மீது சேறு பூச முனைகின்றன.

தற்போதைய எமது நாட்டுச் சூழல் எதிர்கால இலங்கையை அபிவிருத்தியின் பாதையில் இட்டுச் செல்லக்கூடிய நிலைமையை உருவாக்கியுள்ளதால்மீண்டும்ஜனாதிபதிமஹிந்தராஜபக்ஷ ஜனாதிபதியாகும் போது தோட்டத்தொழிலாளர்கள் வாழும் குடியிருப்புகளை அவர்களுக்குச் சொந்தமானதாக ஆக்கிக் கொடுக்க வேண்டும்.

மேலும் கிராம மக்கள் அனுபவிக்கும் அனைத்துசலுகைகளையும் தோட்ட மக்களும் அனுபவிக்க வேண்டும். பெருந்தோட்டக் குடியிருப்புகள் சொந்தமாக்கப்பட்டு அவை பிரதேச சபைகளின் கீழ்கொண்டு வரப்பட வேண்டும்.

தோட்டத்தொழிலாளர்களுக்கும் பொது நீதிகள் அடிப்படையிலேயே அபிவிருத்தித் திட்டங்கள் அமைய வேண்டும் என்றார்.

(ஓ-4)

மக்கள் சமயத்திற்காக சண்டையிடுவர். சமயத்திற்காக எல்லாம் செய்வர். ஆனால் சமய வாழ்வு வாழ மட்டும் செய்யார்.

– பிரிஸ்வெல்

வலம்புரி

# புத்தர் சிலை அமைப்பதைத் தடுக்க யாழ்.படைத்தளபதி முன்வரவேண்டும்

சமயங்கள் எல்லாமும் மனிதனை பண்படுத்துவதற்கான மார்க்கங்கள். சமயத்தின் இலக்கு மனிதனை பண்புடையவனாக–மனித நேயம் உடையவனாக வாழவைப்பதாகும்.

இருந்தும் மனிதர்களின் மரத்துப் போன மனங்களால் சமயங்கள் பாதை மாறி பயணிக்கும் சந்தர்ப்பங்களும் நிறையவே உண்டு.

இலங்கையைப் பொறுத்தவரை இத்துர்ப்பாக்கிய நிலை தாராளமாக உள்ளதெனலாம். இலங்கையில் இனப்பிரச்சினை என்பதற்கு அப்பால் சமயப் பிரச்சினையே மூல காரணமாகவுள்ளதெனலாம்.

இலங்கை பௌத்த நாடு என்ற நினைப்பும்–சிந்தனையுமே இத்தனை அழிவுக்கும் அடிப்படையாகும். இருந்தும் சமயவாதம் மறைந்து நின்று ஊக்கமருந்தேற்ற 'இனம்' என்பதே மேல் எழுகை பெற்று இனப்பிரச்சினையாக விஸ்வரூபம் எடுத்தது.

சமயத்தை மூல வேராகக்கொண்ட இனப்பிரச்சினையின் கடந்த மூன்று தசாப்த காலத்தின் கிடைப்பனவு இழப்புகளும் வேதனையுமாகும்.

எனினும் இதனை யாரும் உணர்வதாக இல்லை. ஒவ்வொரு குண்டுவெடிப்பின்போதும் சமாதான வழியில் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்ற அறிக்கைகளையும் ஆலோசனைகளையும் தவிர செயற்பாடு ஏதேனும் நடந்ததாக வரலாறு இல்லை.

தமக்கு உரிமை வேண்டும் எனப்போராடிய தமிழினம் குறிப்பிட்ட காலத்திற்குள் தனது இலக்கை நிறைவேற்றிக்கொள்ளாத காரணத்தால் சூழ் நிலை மாற்றத்திற்குட்பட்டு எதிர்க்கணிய விளைவை சந்தித்தது.

இதேபோல் இனப்பிரச்சினைக்குத்தீர்வு காண்பதில் இலங்கை அரசு காலம் தாழ்த்தும் ஒவ்வொரு கணமும் சூழ்நிலை மாற்றம் எதிர்க் கணியத்தை நோக்கி நகர்வடைகின்றதென்னும் உண்மை உணரப்பட வேண்டும்.

ஆயினும் நிலைமை பழமையானதாகவே இருக்கின்றது. உதாரணமாக யாழ்ப்பாணம் பிரதான வீதி மடத்தடிச் சந்தியில் (தண்ணீர்த் தாங்கிக்கு அருகாமை) உள்ள அரசமரத்தின் கீழ் புத்தர் சிலை ஒன்றை அமைப்பதற்கான முயற்சிகள் நடப்பதாகத் தகவல்.

அந்த இடத்தில் இருந்த இராணுவக் காவலரண் அகற்றப்பட்டு புத்தர் சிலையை நிறுவும் முயற்சி நடப்பதான தகவல் மிகவும் வேதனைக்குரியது.

புத்தபெருமானின் போதனைகள் பின்பற்றப்படவேண்டியவை. அதேநேரம் யாழ்ப்பாணம் மடத்தடியில் உள்ள அரசமரத்தின் கீழ் புத்த பெருமானின் சிலையை பிரதிஷ்டை செய்துதான் பௌத்த சிந்தனைகளை பரப்ப வேண்டும் என்ற தேவையும் இல்லை.

நிலைமை இதுவாக இருக்கும் போது, தமிழ் மக்களை–அவர்கள் சார்ந்த சமயங்களை வேதனைப்படுத்தும் வகையில் நடந்துகொள்வது அழகல்ல.

விடுதலைப் புலிகளின் தலைமை தோற்கடிக்கப்பட்டதென்ற செய்தி வெளிவந்த போது தென்னிலங்கை வெடிகொளுத்தி ஆரவாரம் செய்தது.

ஆனால் யாழ்ப்பாணத்தில் இருந்த இராணுவத்தினர் மிகவும் அமைதியாக இருந்தனர். அவர்களின் அந்த பண்பை இந்தப் பகுதியில் பாராட்டி எழுதியிருந்தோம்.

தமிழ் மக்களின் பிரச்சினையை உணர்ந்து கொண்டவர் யாழ்ப்பாணக் கட்டளைத் தளபதி என்று நாம் எழுதியது வீணாகாமல் இருக்க புத்தர் சிலை அமைக்கும் விடயத்தில் அவர் தலையிட்டு அதனை நிறுத்த வேண்டும்.

இது இன ஒற்றுமைக்கான கோரிக்கையாகும்.


# சித்த மருத்துவத்தின் சிறப்பை வெளிப்படுத்தும் அரிய நூல்

நூல் :-மருத்துவ நோக்கில் சித்தர்களும் தத்துவ சிந்தனைகளும்

ஆசிரியர் :- வைத்திய கலாநிதி பொன்.இராமநாதன்


(சிரேஷ்ட விரிவுரையாளர் சித்த மருத்துவத்துறை யாழ். பல்கலைக்கழகம்)

விலை :- ரூபா-400/-




வைத்திய கலாநிதி பொன் இராமநாதன் அவர்களால் எழுதப்பட்ட மருத்துவ நோக்கில் சித்தர்களும் தத்துவ சிந்தனைகளும் என்ற நூலானது யாழ் பல்கலைக்கழக சித்த மருத்துவ மாணவர்கள் அனைவருக்கும் மிக்க பயனுடையதாகும். சித்த மருத்துவ மூலதத்துவத்தை ஒரு பாடமாக கற்கின்ற முதலாம் வருட மாணவர்கட்கு முற்று முழுவதுமாக உபயோகமான நூலாகும்.

சித்த மருத்துவத்தின் சிறப்பியல்புகளில் ஒன்றான நாடி சாஸ்திரம் பற்றி விளக்கமாக விபரிக்கப்பட்டுள்ளதுடன் நவீன நோக்கில் ஒப்பிட்டிருப்பது மிக சிறப்பான ஒரு அம்சமாகும்.



ஒரு பிணியாளியை பரீட்சித்து அவரது நிலைமையை அறிய உதவும் அடிப்படைத் தத்துவங்கள் நல்ல முறையில் விபரிக்கப்பட்டுள்ளது.

இந்நூல் எமது துறை சார்ந்தவர்கட்கு மட்டுமல்லாது இந்தியாவில் சித்த மருத்துவப் பட்டப்பிடிப்பினை மேற்கொள்பவர்கட்கும் பட்ட மேற்படிப்பினை மேற்கொள்பவர்கட்கும் மிகவும் பயனுள்ள நூலாகும்.

நான் 1997 ஆம் ஆண்டு பட்ட மேற்படிப்பினை(M.D) பூர்த்தி செய்வதற்காக இந்தியா சென்றிருந்த போது இது போன்ற நூலை நான் பார்த்ததில்லை.

மொத்தத்தில் எமது துறைசார்ந்த சக விரிவுரையாளர் ஒருவரினால் சிறப்பாக இந்த நூல் எழுதப்பட்டமை எமது துறைசார்ந்த அனைவரிற்கும் பெருமை சேர்ப்பதாகும். அவரின் இம் முயற்சிக்கு எனது உளம் கனிந்த நல் வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

டாக்டர் திருமதி தி.குமுதரஞ்சன்
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்த மருத்துத்துறை
யாழ். பல்கலைக்கழகம்

# மொழித் தேர்ச்சி இறுதிப் பரீட்சை (வாய் மூல) –2009

அரசகரும மொழிற் திணைக்களத்தினால் நடத்தப்படவுள்ள மொழித் தேர்ச்சி இறுதிப் பரீட்சை யாழ்.வலயக் கல்வி அலுவலகத்தில் எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை காலை 09.00 மணிக்கு நடைபெறவுள்ளது. இப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ள பரீட்சார்த்திகளின் விபரம் வருமாறு, கே.டி.என்.சிறிவர்த்தன(4 SLAMCவசாவிளான், பலாலி), எஸ்.எம். முகமட் காசிம் (பொலிஸ் நிலையம், நெல்லியடி), ரி. பாமினி (பிரதேச சபை, வலி தெற்கு), பி.தக்கனாக்கினியம் (கூச்சேரி, கிளிநொச்சி), எஸ்.நீலமேகர் (பிரதேச செயலகம், கண்டாவளை), கே.சேகர் (கச்சேரி, கிளிநொச்சி), எஸ். சந்திரன் கச்சேரி, கிளிநொச்சி), ஏ.கே. ஜீவநாதன் (மாநகரசபை, யாழ்ப்பாணம்), இவர்களில் கிளிநொச்சி மாவட்டத்தை சேர்ந்த பரீட்சார்த்திகள் தங்களது அனுமதி அட்டையினை யாழ் வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று பரீட்சைக்கு தோற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (ஓ)

# ஓய்வூதியம் பெறுவோருக்கும் மேலதிகப்படி கூட்டி வழங்க வேண்டும்

## –திருமலை மாவட்ட அரசாங்க ஓய்வு ஊதியம் பெறுவோர் சங்கம்

(கொழும்பு)

அடுத்த வருடம் அரச ஊழியர்களுக்கு வழங்கப்படுவது போன்று ஓய்வூதியம் பெறுவோருக்கும் மேலதிக படியை கூட்டி வழங்க அரசும் ஜனாதிபதியும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று திருகோணமலை மாவட்ட அரசாங்க ஓய்வு ஊதியம் பெறுவோர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இக் கோரிக்கை தொடர்பான கடிதம் ஒன்றை ஜனாதிபதிக்கு மேற்படி சங்கம் அனுப்பி வைத்துள்ளது.

கடந்த காலங்களில் அரசாங்க சேவையில் கடமையாற்றி தற்போது ஓய்வூதியம் பெறும் அனைத்து ஊழியர்களுக்கும் மேலதிகப்படியாக இரண்டாயிரம் ரூபா மட்டுமே வழங்கப்பட்டு வருகின்றது.

அண்மையில் கார்த்திகை 2009 முதல் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு 375ரூபாய் மட்டுமே மேலதிகப்படி உயர்த்தப்பட்டிருப்பதாக ஊடகங்கள் மூலம் அறியக் கூடியதாக இருந்தது என அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சேவைக்காலத்தில் அர்ப்பணிப்புடன் பணியாற்றி ஓய்வூதிய காலத்தில் ஓய்வூதியம் பெறும் நாட்டின் சிரேஷ்ட பிரஜைகளுக்கு அரசு பாரபட்சம் காட்டாது அரச ஊழியர்களுக்கு வழங்குவது போன்று தமக்கும் மேலதிகப்படி வழங்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. (ஓ-2,4)

# ஒளிவிழா

(யாழ்ப்பாணம்)

குருநகரில் அமைந்துள்ள வடகடல் நிறுவனத் தொழிற்சாலையில் இன்று காலை 10 மணிக்கு ஒளிவிழா நடைபெறவுள்ளது.

விழாவில் புனித யாகப்பர் ஆலய பங்குத் தந்தை ஆர். நேசராசா அருளுரை நிகழ்த்தவுள்ளார்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் க.கணேஷ் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக கடற் தொழில் திணைக்கள அதிகாரி ஏ.தர்மலிங்கம் கடற்தொழில் சமாசத் தலைவர் எஸ். தவரட்ணம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

சிறப்பு நிகழ்ச்சிகளாக கிறிஸ்மஸ் பாடல்களுடன் இளைஞர் கலைக்கழக சிறுவர் கழகத்தினால் நடன நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன. (9-39)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

## கல்வியும் சமுதாயமும்



குருகுல முறையில் ஆசிரியனோடு நேரடியாகத் தொடர்பு கொண்டு பயிற்சி பெறுவதுதான் சிறந்த கல்வி முறை என்பது எனது கருத்து. ஆசிரியரின் வாழ்க்கை ஒரு முன்மாதிரியாக அமையாமல் எந்த விதக் கல்வியையும் பெறமுடியாது.

உங்கள் பல்கலைக்கழகங்களை எடுத்துக் கொள்ளுங்கள் கடந்த ஐம்பது ஆண்டுகளாக அவை இருந்து என்ன சாதித்திருக்கின்றன? (1897–ஆம் ஆண்டில் சென்னைச் சொற்பொழிவு ஒன்றில் விவேகானந்தர் குறிப்பிட்டது) சுயமாகச் சிந்திக்கும் உண்மையான மனிதன் ஒருவனையும் அவை உண்டாக்கியதாகத் தெரியவில்லை. அவை வெறும் தேர்வுகளை நடத்தும் நிறுவனங்களாக மட்டுமே இயங்கிக் கொண்டிருக்கின்றன. பொது நலத்திற்காக நம்மை தியாகம் செய்ய வேண்டும் என்ற கருத்து நமது நாட்டில் இன்னும் வளராமலேயே இருக்கின்றது.

## முருங்கைக்காய், பச்சைமிளகாய் விலைகள் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டு சந்தைகளில் முருங்கைக்காய், பச்சைமிளகாயின் விலைகள் அதிகரித்து காணப்படுகின்றன.

தற்போது சந்தைகளில் பச்சைமிளகாய் 300 ரூபாவுக்கு அதிகமாகவும் அத்தோடு முருங்கைக்காய் 300 தொடக்கம் 400 ரூபா வரையிலும் விற்கப்படுகின்றன.

அத்தோடு தொடர்மழை வீழ்ச்சியினால் தாழ்ந்த நிலப்பகுதிகளில் வெள்ள நீர் பயிர்களை மூடி நிற்பதால் பயிர்கள் அழுகி அழிவடையும் நிலையிலுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். இதனால் வெங்காயம், மரக்கறிப் பயிர்கள் என்பன அழிவடைந்துள்ளதாலும் இனிவரும் நாட்களில் உள்ளூர் உற்பத்திகளின் விலைகள் மேலும் அதிகரிக்கப்படலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-2)




## முறைசாராக் கல்விப் பிரிவின் இறுதிப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ். வலயக் கல்வி முறைசாராக் கல்விப் பிரிவினால் நடாத்தப்படும் 2009 ஆம் ஆண்டிற்கான இறுதிப்பரீட்சை எதிர்வரும் 28 ஆம் திகதியில் இருந்து ஜனவரி 12 ஆம் திகதி வரை காலை 9 மணி தொடக்கம் 4.00 மணி வரை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இதற்கான பரீட்சை ஆவணங்கள் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். வலய முறைசாராக் கல்விப் பிரிவில் வழங்கப்படவுள்ளது.

எனவே இவ் ஆவணங்களை தொழில் திறன் பயிற்சி நெறி நடைபெற்ற பாடசாலை அதிபர்கள் போதனாசிரியர்கள் பெற்றுக் கொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் அறிவித்துள்ளார். (ஓ-7)

## அதிபர்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வி வலய பாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். வலய முகாமைத்துவ மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

2009 ஆம் ஆண்டின் செயற்பாடுகளின் மீளாய்வு, 2010 ஆம் ஆண்டிற்கான செயற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் என்பன இடம்பெறவுள்ளதால் பாடசாலை அதிபர்களை தவறாது சமூகமளிக்குமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் கேட்டுக் கொள்கின்றார். (ஓ-7)

## 2010 இல் க.பொ.த. உ/த பரீட்சைக்கு தோற்றவுள்ள மீளக்குடியமர்ந்த மாணவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில், தற்போது இணைந்துள்ள 2010 ஆம் ஆண்டு க.பொ.த. (உ/த) பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று யாழ். வலயக் கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு இடம் பெறவுள்ளது.

இதில் வன்னியில் இடம்பெயர்ந்து தற்போது யாழ்ப்பாணத்தில் மீளக்குடியமர்ந்து யாழ்கல்வி வலயப் பாடசாலைகளில் இணைந்துள்ள 2010 ஆண்டு க.பொ.த. உ/த பரீட்சைக்குத் தோற்றவுள்ள அனைத்து மாணவர்களையும் தவறாது கலந்து கொள் ளுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் அ. வேதநாயகம் கேட்டுக் கொள்கின்றார். (ஓ)

## டெங்கு நோய் தாக்கத்தினால் யாழ். போதனா வைத்தியசாலையில் இதுவரை மூவர் மரணமடைந்துள்ளனர்

டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் என இதுவரை எண்பத்தொரு பேர் இனங் காணப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணத்தில் டெங்கு நோய்த் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில் இதுவரை யாழ். போதனா வைத்தியசாலையில் 3 பேர் மரணமடைந்துள்ளதாக அவ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ந-7)

## இடிபாடுகளுடன் வீடுகள்

(யாழ்ப்பாணம்)

தற்போது போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ள நிலையில் தமது சொந்த வீடுகளைப் பார்க்கச் சென்ற கிளிநொச்சியை சேர்ந்த மக்கள் இடிபாடுகளைக் கண்டு அதிர்ச்சியடைந்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மக்களில் பலர் முகாமிலிருந்து விடுவிக்கப்பட்டு தற்போது யாழ். குடாநாட்டிலேயே பெருமளவில் குடியேறியுள்ளனர்.

சொந்த ஊரின் நினைவிலே வாழ்ந்த இம் மக்களுக்கு போக்குவரத்து தளர்வு சற்று நிம்மதியளித்தது.

எனினும் அங்கு சென்றவர்கள் கற்குவியலையே காண முடிந்தது என்றும் தமது வீடுகள் கடைகளை எட்டநின்றே பார்க்க அனுமதிக்கப்பட்டதென்றும் எங்கும் வெளியாகவே காணப்பட்டதாகவும் தெரிவித்தனர். (ஓ-2)

## 'நீதம்' மலர் அறிமுக விழா

யாழ்ப்பாண பல்கலைக்கழக சட்டமாணவர் சங்கத்தின் 'நீதம் மலர்' அறிமுக விழா இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் வி. மணிவண்ணன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் என். ஞானகுமரன் மற்றும் யாழ். மாவட்ட உயர் நீதிமன்ற நீதிபதி இ. த. விக்னராஜா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

நிகழ்வில் வரவேற்பு நடனம், தலைமையுரை, நூல் அறிமுகம் என்பன இடம் பெறவுள்ளது. விழாவில் நூல் ஆய்வுரையை ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி ஆர். வரதராஜா ஆற்றவுள்ளார். தொடர்ந்து சிறப்பு விவாத அரங்கும் இடம்பெறவுள்ளது. (ஓ-9)

## இன்றும் மழை தொடரும்

தற்போது பெய்து வரும் மழை இன்றும் தொடரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தொடரும் வடகீழ் பருவப்பெயர்ச்சிக் காற்றின் மூலம் இன்றும் காற்றுடன் கூடிய மழை பொழியும் என திருநெல்வேலி வளிமண்டல ஆய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஓ-2)

## ஒளிவிழா

யாழ். மாவட்டச் செயலக நலன்புரிக் கழகத்தின் ஒளி விழா இன்று புதன்கிழமை பி.ப. 2 மணிக்கு மாவட்ட செயலக மகாநாட்டு மண்டபத்தில் நலன்புரிக்கழக தலைவர் ம.வித்தியாணந்த நேசன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் ஆசிரியுரையை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஷ் வழங்கவுள்ளார்.

அத்துடன் கிறிஸ்து பிறப்பின் விடுதலைச் செய்தியை யாழ். மாவட்ட ஆயர் அதி வணக்கத்துக் குரிய தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை வழங்கவுள்ளார். (ஓ-4)

## மீளக்குடியேறியோர் மழையினால் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

தற்போது பெய்துவரும் தொடர் மழையினால் மீளக்குடியேறிய மக்கள் சீவனோபாயத்திற்கு கஸ்ரப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் யாழ். குடாநாட்டில் மீளக்குடியேறிய பல குடும்பங்களுக்கு இன்னமும் உலர் உணவுகள் வழங்கப்படாத பட்சத்தில் அவர்கள் தம் அன்றாட உணவுத் தேவைகளுக்காக கூலி வேலை போன்றவற்றில் ஈடுபட்டு வந்தனர்.

தற்போது பெய்துவரும் மழையினால் அது தடைப்பட்டுள்ளதாகவும் மிகவும் கஸ்ரமான நிலையே காணப்படுவதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர். (ஓ-2)

## ஆய்வேட்டுக்கான வாய்மூலப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக பட்டப்பின் படிப்புகள் பீட கல்வியாண்டு 2007/2008 க்கான முதுகல்வி மாணி கற்கை நெறிக் குரிய ஆய்வேட்டுக்கான வாய்மூலப் பரீட்சை (Presentation of dissertation and Oral Examination) எதிர்வரும் 28, 29 ஆம் திகதிகளில் நடைபெறும் என முதுகல்விமாணி கற்கைநெறியின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (ஓ)

## விசேட பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் 3 ஆவது விசேட பொதுக்கூட்டம் இன்று புதன்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூடத்தில் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதில் பல்கலைக்கழக ஆசிரியர் சங்க உறுப்பினர்கள் அனைவரையும் மற்றும் ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் டாக்டர் சி. இளங்குமரன் கேட்டுக் கொள்கின்றார். (ஓ-9)

## 10 வருடங்களின் பின்னர் நெற் செய்கைக்கு அனுமதி

(தனங்கிளப்பு)

தனங்கிளப்பு, மறவன்புலோ ஆகிய பகுதியில் சுமார் 10 வருடங்களுக்கு பின்னர் நெற்பயிர்ச் செய்கை செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளமையால் இப்பகுதி மக்கள் பெரும் ஆர்வத்துடன் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இப்பகுதியில் நெற் பயிர்கள் நல்ல விளைச்சலை தரக்கூடிய நிலையில் காணப்படுகின்றதாக இப்பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

இதேவேளை இப்பகுதியில் 800 ஏக்கருக்கு மேல் பயிர் செய்கை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ-37)




கல்வி அமைச்சின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்ற அங்கவீனர்களுக்கான சர்வதேச நினைவு தின விழாவில் வடமாகாண விசேட கல்வி இணைப்பாளர் திருமதி நிஷாந்தி பெர்னாண்டோ, யாழ். மாவட்ட விசேட கல்வி ஆசிரிய ஆலோசகர் மற்றும் விசேட கல்வி ஆசிரியர்கள் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் யாழ். நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை மாணவி அ. கஜானிக்கு அன்பளிப்பு வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

# புங்குடுதீவு இறுப்பிட்டி வீதியை திருத்த அரச அதிபர் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு இறுப்பிட்டி பெருங்காட்டுச் சந்தி வரையான வீதியைத் திருத்துவதற்கு ஏற்ற நடவடிக்கையை எடுக்குமாறு வீதி அபிவிருத்தித் திணைக்களத்திற்கு அரச அதிபர் க.கணேஷ் பணிப்புரை விடுத்துள்ளார்.

குறிப்பிட்ட வீதி சுமார் 25 வருடங்களுக்கு மேலாகக் கவனிப்பார் அற்று இருப்பதாக பல்வேறு தரப்பினராலும் குற்றஞ்சாட்டப்பட்டு வந்தது.

இந் நிலையில் இறுப்பிட்டி பெருங்காட்டுச் சந்தி வரையான வீதியை விரைவில் திருத்துவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை எடுப்பதுடன் நிதி ஒதுக்கீடுகளைச் செய்யுமாறும் அரச அதிபர் பணித்துள்ளார்.

இதேவேளை இறுப்பிட்டி வீதியில் பாடசாலைகள், அரச அலுவலகங்கள் மற்றும் பிரசித்தி பெற்ற ஆலயங்கள் இருப்பதுடன் பொதுமக்களும் பெருமளவில் அங்கு வசித்து வருகின்றனர். (ச-5)

# அல்லைப்பிட்டிச் சோதனைச் சாவடியில் மழையால் பொதுமக்கள் பெரும் அவலம்

(யாழ்ப்பாணம்)

அல்லைப்பிட்டி கடற்படைச் சோதனைச் சாவடியில் இடம்பெற்று வரும் சோதனை நடவடிக்கைகளால் பொதுமக்கள் பெரும் அவலத்துக்குள்ளாகினர்.

அண்மைய நாள்களாகத் தொடர்ந்து கடும் மழை பெய்து வருகின்றது. இந் நிலையிலும் அல்லைப்பிட்டிச் சோதனைச் சாவடியில் பொதுமக்கள் வாகனங்களிலிருந்து இறக்கப்பட்டுப் பொதிகள் சோதனையிடப்படுவதுடன் அடையாள அட்டைப் பதிவும் இடம்பெறுகின்றது.

இதனால் மழைக்கு மத்தியில் நீண்ட வரிசையில் மக்கள் காத்திருக்க வேண்டிய நிலை காணப்படுவதுடன் அவர்கள் பயணித்த வாகனங்கள் அவர்களை ஏற்றாது செல்லும் சந்தர்ப்பங்களும் இடம்பெறுகின்றன.

இதேவேளை தீவுப் பகுதியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வரும் போது பண்ணைச் சோதனைச் சாவடியிலும் பயணிகள் இறக்கப்பட்டுச் சோதனை செய்யப்படுகின்றனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து ஏ-9 பாதையூடாக வவுனியாவுக்குச் செல்லும் போது எந்த வித சோதனை நடவடிக்கைகளும் இல்லாத போதும் யாழ்ப்பாணத்திலிருந்து தீவுப் பகுதிக்குச் செல்லும் போது இரண்டு இடங்களில் மக்கள் சோதனை செய்யப்படுகின்றமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (எ-1)

# நலன்புரி முகாம்களில் தங்கியிருந்த சுமார் 71 ஆயிரம் பேர் மீள்குடியமர்வு

## யாழ்ப்பாண அரச அதிபர் தகவல்



வவுனியா, மன்னார், திருகோணமலை மற்றும் யாழ்ப்பாணம் நலன்புரி முகாம்களிலில் தங்க வைக்கப்பட்டிருந்த 23 ஆயிரத்து 882 குடும்பங்களைச் சேர்ந்த 71 ஆயிரத்து 186 பேர் யாழ்.மாவட்டத்திலுள்ள 388 கிராம சேவையாளர் பிரிவுகளில் குடியமர்த்தப்பட்டுள்ளனர் என யாழ்.அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் தற்போதைய நிலைமைகள் தொடர்பிலும் அபிவிருத்திப் பணிகள் தொடர்பிலும் விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாடொன்று நேற்று யாழ்.செயலகத்தில் அரச அதிபர் க.கணேஷினால் நடத்தப்பட்டது.

இவ் ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் யாழ்.அரச அதிபர் க.கணேஷ் மேலும் தெரிவிக்கையில்,

வன்னி மோதல்கள் காரணமாக இடம்பெயர்ந்து வவுனியா, மன்னார், திருகோணமலை மற்றும் யாழ்ப்பாணம் நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருந்த 23 ஆயிரத்து 882 குடும்பங்களைச் சேர்ந்த 71 ஆயிரத்து 186 பேர் யாழ்.மாவட்டத்தில் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இம் மக்கள் யாழ்.மாவட்டத்திலுள்ள 11 பிரதேச செயலக, 4 உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட 388 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த 890 கிராமங்களில் குடியமர்த்தப்பட்டுள்ளன.

இதில் 2 ஆயிரத்து 956 குடும்பங்கள் சொந்த இடங்களில் குடியமர்த்தப்பட்டுள்ளனர். அத்துடன் 20 ஆயிரத்து 543 குடும்பங்களைச் சேர்ந்த 61 ஆயிரத்து 578 பேர் உறவினர்கள், நண்பர்களுடன் தங்க அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் 383 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 264 பேர் இடைத் தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதனைவிட வடமராட்சி கிழக்கு, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சொந்த இடமாகக் கொண்ட 139 குடும்பங்களைச் சேர்ந்த 956 பேர் தென்மராட்சி இராமாவில், கைதடி நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 68 குடும்பங்களைச் சேர்ந்த 189 பேர் இன்று உறவினர்கள், நண்பர்களுடன் தங்க அனுமதிக்கப்படவுள்ளனர். இதற்கு மேலாக யாழ்.மாவட்டத்தில் உள்ளக இடம்பெயர்வினால் வேறு இடங்களில் வசித்து வந்த மண்டைதீவு, மண்கும்பான், மணற்காடு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 495 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 755 பேர் சொந்த இடங்களில் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

### மீள்குடியமர்ந்தவர்களுக்கான உதவிப் பணக் கொடுப்பனவு

நலன்புரி முகாம்களிலிருந்து தற்போது யாழ்.மாவட்டத்தில் குடியமர்த்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபாய் உதவிப் பணம் வழங்கப்படுகின்றது. இதில் முற்பணமாக 5 ஆயிரம் ரூபாய் கையளிக்கப்படுவதுடன் மீதம் 20 ஆயிரம் ரூபாய் வங்கியில் வைப்பிலிடப்படுகின்றது.

இதில் நேற்று முன்தினம் வரை 22 ஆயிரத்து 984 குடும்பங்களுக்கு 5 ஆயிரம் ரூபாய் முற்பணக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளதுடன் மீதமுள்ள அனைவருக்கும் இம் மாதம் 31 ஆம் திகதிக்கு முன் வழங்கப் படும்.

அத்துடன் மீதம் 20 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவில் நேற்று முன்தினம் வரை யு.என்.எச்.சி.ஆர். நிறுவனம் 10 ஆயிரத்து 584 குடும்பங்களின் வங்கிக் கணக்குகளில் வைப்பிலிட்டுள்ளது.

இப் பணியினை யு.என்.எச்.சி.ஆர். நிறுவனம் தினமும் தலா 600 குடும்பங்கள் வீதம் மேற்கொண்டு வருகின்றது. இக் கொடுப்பனவுடன் சேர்த்து ஒவ்வொரு குடும்பத்திற்கும் மேலும் 25 ஆயிரம் ரூபாய் நிதி வழங்கப்படும் என அரசு அறிவித்திருந்த நிலையில் அதற்கான ஒதுக்கீட்டை நாம் கேட்டுள்ளோம்.

இவ் ஒதுக்கீடு கிடைத்தவுடன் மீள்குடியமர்த்தப்பட்ட குடும்பங்களுக்கு மேலும் தலா 25 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு வழங்கப்படும். இதேவேளை யாழ்.மாவட்டத்தில் உள்ளக இடம்பெயர்வினால் வேறு இடங்களில் தங்கியிருக்கும் குடும்பங்களுக்கு நிதிக் கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் என சம்பந்தப்பட்டவர்களிடம் கேட்டுள்ளோம். இதற்கு சாதகமான முடிபு விரைவில் கிடைக்கும் என எதிர்பார்க்கின்றேன்.

### யுத்த அனர்த்தப் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்கள்

யுத்த அனர்த்தப் பிரதேசங்களாக அறிவிக்கப்பட்ட யாழ்.கடற்கரை வீதி, குருநகர், கொழும்புத்துறை மற்றும் யாழ்.நகர் தாராக்குளம் பகுதியில் 560 குடும்பங்கள் மீள்குடியமர அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இப் பகுதியில் கண்ணிவெடி தொடர்பான அபாயம் இருப்பதனால் உறுதிச் சான்றிதழ் பெற்றவுடன் அனைவரும் மீள்குடியமர்த்தப் படுவர் என்றார் யாழ்.அரச அதிபர் க. கணேஷ். (ச-5)

# திசநாயகத்திற்குப் பிணை வழங்க எதிர்ப்பில்லையாம்

(கொழும்பு)

சிரேஷ்ட ஊடகவியலாளர் ஜே.எஸ். திசநாயகத்திற்கு பிணை வழங்குவதற்கு எதிர்ப்பு வெளியிடப்பட மாட்டாது என சட்ட மாஅதிபர் மொகான் பீரிஸ் மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு அறிவித்துள்ளார்.

பயங்கரவாத நடவடிக்கையுடன் தொடர்புடைய குற்றச்சாட்டின் பேரில் ஊடகவியலாளர் ஜே.எஸ்.திசநாயகத்திற்கு உயர் நீதிமன்றம் 20 ஆண்டு கடூழிய சிறைத்தண்டனை விதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இனங்களுக்கிடையிலான பிரிவினையை ஏற்படுத்தும் கருத்துக்களைக் கொண்ட ஆக்கங்களை பிரசுரங்கள் செய்த குற்றத்திற்காகப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் ஊடகவியலாளர் திசநாயகத்தைக் கைது செய்து வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆட்சேபனை இல்லாத காரணத்தினால் திசநாயகத்தின் பிணை வழங்கப்படக் கூடிய சாத்தியம் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

# பாதுகாப்பு வலயப் பகுதியில் மீள்குடியமர்த்த 1355 பேர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் உயர் பாதுகாப்பு வலய முன்னரங்கப் பாதுகாப்பு வலயத்தில் முதல் 300 மீற்றரில் மீள்குடியமர்வதற்கு ஆயிரத்து 544 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 355 பேர் இனங்காணப்பட்டுள்ளனர் என யாழ்.அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

இது தொடர்பில் யாழ்.செயலகத்தில் நேற்று நடந்த ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

வலிகாமம் உயர் பாதுகாப்பு வலயத்தின் முன்னரங்கப் பாதுகாப்பு வலயமான 600 மீற்றரில் தெற்கே தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவில் 186 குடும்பங்களும் உடுவில் பிரதேச செயலக பிரிவில் 8 குடும்பங்களும் கோப்பாய் பிரதேச செயலக பிரிவில் 187 குடும்பங்களுமாக 381 குடும்பங்கள் மீள்குடியமர்த்த சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பலாலி விமான நிலையத்திற்கு அண்மையாக சுதந்திரபுரம் பகுதியைச் சேர்ந்த 94 குடும்பங்கள் மீள்குடியமர்த்தப்பட்டு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும்.

இதில் 70 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும். அத்துடன் விவசாயக் கிணறுகள் திருத்தல், 2 பொதுக் கிணறுகள் அமைத்தல் மற்றும் 80 மலசலகூடங்கள் அமைத்தல் போன்றவையும் செய்து கொடுக்கப்படும்.

இதற்கு மேலாக வித்தகபுரத்தில் 17 குடும்பங்கள் மீள்குடியமர்த்தப்பட்டு 7 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகளும் 4 குடும்பங்களுக்கு தற்காலிக வீடுகளும் அமைத்துக் கொடுக்கப்படும்.

முன்னரங்கப் பகுதியின் முதல் 300 மீற்றர் வடக்குப் பகுதியில் 180 குடும்பங்கள் தொடர்ந்து குடியிருக்க அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் 511 குடும்பங்கள் மீள்குடியமர்த்தப்படுவர் என யாழ்.அரச அதிபர் க.கணேஷ் குறிப்பிட்டார். (ச-5)

# பத்திரிகை செய்தியை அடிப்படையாக்கி இலங்கை மீது ஐ.நா. குற்றஞ்சாட்டுகிறது

## அரசாங்கம் கவலை

பத்திரிகைச் செய்தி ஒன்றை அடிப்படையாகக் கொண்டு ஐக்கிய நாடுகள் அமைப்பு இலங்கையின் மீது குற்றம் சுமத்துவதாக மனித உரிமைகள் அமைச்சின் செயலாளர் ராஜீவ விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

இறுதிக் கட்ட யுத்தம் தொடர்பில் ஜெனரல் சரத் பொன்சேகா பத்திரிகை ஒன்றுக்கு அளித்த நேர்காணலை அடிப்படையாகக் கொண்டு ஐக்கிய நாடுகள் அமைப்பு இலங்கையிடம் விளக்கம் கோரியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜெனரல் சரத் பொன்சேகா இவ்வாறான ஒரு கருத்தினை வெளியிட்டிருக்கக் கூடாது எனவும் அவ்வாறு கருத்து வெளியிடப்பட்டிருந்தாலும் அந்தக் கருத்தினை ஊடகத்தில் வெளியிட்டிருக்கக் கூடாது என்பதே தமது கருத்து என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பத்திரிகை நேர்காணல் ஒன்றை அடிப்படையாகக் கொண்டு ஐக்கிய நாடுகளின் சட்ட விரோத படுகொலைகள் தொடர்பான விசேட பிரதிநிதி பிலிப் அல்ஸ்டன் கடிதம் மூலம் இலங்கையிடம் விளக்கம் கோரியுள்ளார்.

இந்த நேர்காணலில் தாம் தெரிவித்த கருத்து திரிபுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அவ்வாறான கருத்துக்களைத் தாம் முன்வைக்கவில்லை எனவும் ஜெனரல் சரத் பொன்சேகா ஏற்கனவே ஒப்புக் கொண்டுள்ளதாகப் பேராசிரியர் ராஜீவ விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் கடிதத்திற்கு இலங்கை அரசாங்கம் பதில் கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-5)



சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் செயலாளர் திருமதி விஜி ஜெகராஜசிங்கத்தினால் கையளிக்கப்பட்ட ஒரு தொகுதி நூல் யாழ்.பொது நூலகத்திற்கு அன்பளிப்புச் செய்யப்பட்டது. இந் நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அன்பளிப்புச் செய்யப்பட்ட புத்தகங்களை யாழ்.மேயரிடம் கையளிப்பதைப் படத்தில் காணலாம்.

# முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா காலத்திலேயே இராணுவம் நவீனமயப்படுத்தப்பட்டது

## ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

சந்திரிகா காலத்திலேயே இராணுவம் அதி நவீனமயப்படுத்தப்பட்டது. கனரக பீரங்கிகள், டாங்கிகள், நவீன சாதனங்கள் உட்பட அனைத்தும் சந்திரிகா ஆட்சியிலேயே கொள் வனவு செய்யப்பட்டது. ஆனால் அந்த காலத்தில் பிரபாகரனை நெருங்க முடியவில்லை. மாங்குளம் ஆனையிறவு ஏன் வன்னியினை கூட பிரபாகரனிடம் இழந்தோம்.

இதற்கு காரணம் அன்று இராணுவத் தலைமை செயல்திறன் அற்று இருந்தது. இவ்வாறு கூறியுள்ளார் சரத் பொன்சேகா. நேற்றுமுன்தினம் அனுராதபுரத்தில் நடந்த தேர்தல் பிரசார கூட்டத்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஆனால் எனது படைத்தலைமை காலத்தில் சந்திரிகா காலத்தில் நவீனமயப்படுத் தப்பட்ட படைத்துறையினரை வைத்து பிரபா கரனை தோற்கடித்தேன். ஆகவே மஹிந்த தானே போரினை வென்றேன் என்று கூறுவதோ அல்லது கோத்தபாய தானே வெற்றிக்கு வழி வகுத்தேன் என கூறுவதோ இராணுவத்தினரை அவமதிக்கும் செயல் என கூறிய சரத் பொன் சேகாமஹிந்தஆட்சியில் இருக்கின்றஅனைத்து ஊழல் களையும் துடைத்து நாட்டில் மக்களுக்கு நல்ல ஆட்சியினை கொண்டுவருவேன் என கூறினார். (ச-5)

# பொன்சேகாவின் பாதுகாப்புப்பிரிவு பொறுப்பாளர் கடத்தப்பட்டு விடுதலை

(கொழும்பு)

ஜெனரல் சரத் பொன்சேகாவின் உள்ளக பாதுகாப்பு பிரிவு பொறுப்பாளரான ஓய்வு பெற்ற இராணுவ கப்டன் கடத்தப்பட்டு இரு நாட்களின் பின் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக ஜெனரல் சரத் பொன்சேகா தேர்தல் ஆணையாளரிடம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, எனது பாதுகாப்புப் பிரிவின் உள்ளக பாதுகாப்புக்கு பொறுப்பான அதிகாரியான ஓய்வுபெற்ற கப்டன் தர இராணுவ அதிகாரி சில தினங்களுக்கு முன்னர் இனம்தெரியாத நபர்களினால் கடத்தப்பட்டு இரு நாட்கள் இனம் தெரியாத இடம் ஒன்றில் தடுத்து வைக்கப் பட்ட பின்னர் விடுவிக்கப் பட்டுள்ளார். (ச-5)

# இந்தோனேசிய அகதிகள் கப்பலில் 3 விடுதலைப்புலிகள் உள்ளனர்-அரசு

(கொழும்பு)

இந்தோனேசியா மெரெக் துறைமுகத்தில் தரித்திருக்கும் படகில் உள்ள இலங்கை அகதிகளில் மூன்று முன்னாள் தமிழீழ விடுதலைப் புலிகள் இருப்பதாக இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது. இலங்கையின் அவுஸ்திரேலியாவுக்கான உயர்ஸ்தானிகர் சேனக வலகம்பாய இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

ஓசியானிக் வைக்கிங் கப்பலில் இருந்து தற்போது மீள்குடியேறவிருக்கும் அகதிகள் தொடர்பில் தகவல்கள் கிடைக்கவில்லை என தெரிவித்துள்ள அவர் மெராக் துறைமுகத்தில் தரித்துள்ள படகில் உள்ளவர்களில் மூவர் தமிழீழ விடுதல்லைப் புலிகள் என அடையாளம் காணப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

எனினும் இலங்கையின் இந்த தகவலுக்கு அவுஸ்திரேலிய வெளியுறவுத்துறை அமைச்சர் ஸ்டீபன் ஸ்மித் கருத்து எதனையும் கூற மறுத்துவிட்டார். கடந்த ஒக்டோபர் மாதம் இந்தோனேசிய கடற்படையினரால் கைப் பற்றப்பட்ட 255இலங்கை அகதிகளை கொண்ட படகு இன்று வரை மெராக் துறை முகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. (ச-5)

## இலங்கை அரசை ஐ.நா...

நடவடிக் கையாகவே ஜெனரல் சரத் பொன் சேகா தெரிவித்த கருத்து தொடர் பில் ஐக்கிய நாடுகள் சபை இலங்கை அர சாங்கத்திடம் விசாரணை நடத்தவுள்ளதா கவும் அதற்கு இலங்கை அரசாங்கம் ஒத் துழைப்பு வழங்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளதாக அரசாங்கம் தெரிவிப்பதாகவும் அவர் கூறினார்.

என்ன பொய்பிரசாரங்களை மேற் கொண்டாலும் ஜனாதிபதி மஹிந்தவின் தோல்வி உறுதியாகிவிட்டதாகவும் அவர் குறிப்பிட்டார். கட்சி அலுவலகத்தில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற விஷேட செய்தியாளர் மாநாட்டில் அவர் இதனை தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுடனான இறுதி யுத்தத்தின் போது சரணடைய வந்த விடுதலைப் புலிகளின் தலைவர்கள் இலங்கை அரசாங்கத்தின் உயர்மட்ட அதிகாரிகளின் உத்தரவின் பேரில் கொலை செய்யப்பட்டதாக சரத் பொன்சேகா தெரிவித்த கருத்திற்கு ஐக்கிய நாடுகள் சபை ஸ்ரீ லங்கா அரசிடம் விளக்கம் கோரியதாகவும் அது தொடர்பில் விசாரணை நடத்தப்படவுள்ளதாகவும் அரசாங்கம் தெரிவித்துவருகின்றது. ஆனால் அது உண்மையல்ல.

ஐக்கிய நாடுகள் சபை அவ்வாறான ஒரு விசாரணையை கோரவில்லை என்று மங்கள சமரவீர சுட்டிக்காட்டினார்.

சரத் பொன்சேகாவின் கூற்று குறித்து அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன என்று மாத்திரமே கேட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த மங்கள சமரவீர, அரசாங்கம் உண்மையை மறைத்து சரத் பொன்சேகா மீது சேறுபூசி பொய்ப்பிரசாரங்களை மேற் கொண்டு வருவதாகவும் குற்றம் சாட்டினார். (ச-5)

## யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட...

க.கணேஷ் தகவல் தருகையில்,

யாழ்.தேர்தல் மாவட்டத்தில் அடங்கும் யாழ்ப் பாணம் ,கிளிநொச்சி மாவட்டங்களில் எதிர் வரும் ஜனவரி 26ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் 7 இலட்சத்து 21 ஆயிரத்து 359 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

இத் தொகை மதிப்பீடு 2008 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பின் அடிப்படையில் பெறப் பட்டது.

இது கடந்த முறையை விட 20 ஆயிரம் வாக் காளர்கள் அதிகமானதாகும். இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் 11 தேர்தல் தொகுதிகளில் 624வாக்களிப்பு நிலையங்கள் அமைக் கப்படும். இதில் யாழ்ப்பாண மாவட் டத்தில் 95 வாக்களிப்பு நிலையங்களும் அமைக்கப்படும்.

இதற்கு மேலாக மருதங்கேணி ,தென்மராட்சி இராமாவில் நலன்புரி முகாம் மற்றும் தெல்லிப்பழை புனர்வாழ்வு நிலையத்திலும் தற்காலிகவாக்களிப்புநிலையம் அமைக்கப்படும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் அமைக்கப் படும் இடம்பெயர்ந்தோர் வாக்களிப்பு நிலையம் தொடர்பில் இம்மாத இறுதியில் அறிவிக் கப்படும்.

இடம்பெயர்ந்த மக்களிடமிருந்து இது வரை 2 ஆயிரத்து 35 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. இவ்விண்ணப்பங்கள் தேர்தல்கள் ஆணையாளருக்கு அறிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை யாழ்.தேர்தல் மாவட்டத்தில் தபால்மூலம் வாக்களிப்பதற்கு 5 ஆயிரத்து 785 பேர் விண்ணப்பித்துள்ளனர்.

இதன் பிரகாரம் தபால் மூல வாக்காளர் இடாப்பு நாளை தயாரிக்கப்படும் என யாழ். மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் க.கணேஷ் குறிப்பிட்டார். (ச-5)

## நம்பியாரிடம் விளக்கம் கோரா...

விஜய் நம்பியாரின் விஜயங்கள், தொடர் பாடல்கள் தொடர்பான சந்தேகங்களையும் புலம் பெயர் தமிழர்கள் நடத்திய போராட்டங்களை க்ண்டும் காணாமல் இருந்த ஐக்கிய நாடுகளின் மெத்தனப் போக் குகளைத் தனது முந்தைய பத்திரிகையாளர் சந்திப்பில் கண்டித்துள்ள இன்னசிற்றி பிறஸ் தற்போது இந்தக் கேள்வியினை எழுப்பியுள் ளது.

சரணடைந்த விடுதலைப்புலிகளின் தலைவர்கள் இலங்கை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாயவின் உத்தரவின் பேரில் இலங்கைப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்கள் என்று இலங்கையின் முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா தெரிவித்தும் கூட இது விடயத்தில் அமெரிக்கா மௌனம் சாதித்து வருகிறது.

அதேவேளை சரணடைந்த விடுதலைப் புலிகளின் தலைவர்களுக்கு என்ன நடந்தது என்று விளக்கமளிக்குமாறு ஐக்கிய நாடுகள் சபையின், படுகொலைகள் விவகாரம் தொடர்பான பிரதிநிதி பிலப் அல்ஸ்டன் இலங்கை அரசாங்கத்திடம் கோரியுள்ளார்.

இந்தக் கோரிக்கை தொடர்பாக இலங்கை அரசாங்கம் மிக சுலபமாக தனது மறுப்பறிக் கையையோ அல்லது விசாரணைகளை தாம் மேற்கொள்வதாகவோ ஒருபதிலை வழங் கப் போவது உண்மை.

ஏனெனில் வன்னியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தில் அப்பாவிப் பொதுமக்கள் படையினரால் சுட்டுக்கொல்லப்படும் வீடியோவை சனல்-4 தொலைக்காட்சி வெளியிட்டிருந்த போது கூட இலங்கை அரசாங்கம் இதே மாதிரியான பதிலையே வெளியிட்டிருந்தது.

ஆகவே படுகொலை செய்யப்பட்ட விடுதலைபுலிகளின் தலைவர்கள் சரணடைவதற்கு முன்னர் அவர்கள் தொடர்பு கொண்ட ஐ.நா. அதிகாரியான விஜய் நம்பியாரிடமே ஐக்கி யநாடுகள் சபை முதலில் விளக்கம் கோரியிருக்கவேண்டும். ஆனால் அவ்வாறு நடைபெற வில்லை. இது தொடர்பாக விஜய் நம்பி யாரிடம் விளக்கம் கோராதது ஏன்?- என்று இன்னசிற்றி பிறஸ் கேள்வி எழுப்பி யுள்ளது. (ச-5)

## மீண்டும் அரசியல் களத்தில்...

தனது அரசியல் வாழ்வை மீண்டும் ஆரம்பிக்கப்போவதாக அறிவிப்பார் என்று தெரிவிக் கப்பட்டுள்ளது.

அன்றைய சந்திப்பில் தனது மகன் விமுக்தியையும் தனது முன்னாள் அரசியல் சகாக் களுக்கு அவர் அறிமுகம் செய்து வைப்பார் என்று தெரியவருகிறது.

சில நாட்களுக்கு முன்னர் மகரகம புற்று நோய் வைத்தியசாலைக்கு மருந்து வகைகளை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு பேசுகையில், இந்த நாட்டை நல்லவர்களின் கைகளில் ஒப்படைப்பதற்கு மேற்கொள்ளப்படும் எந்த முயற்சிக்கும் நான் உதவிபுரிவேன். நான் அரசியலில் இருந்தோ எனது கட்சியிலிருந்தோ விலகியவள் அல்ல. விலக்கப்பட்டவள்.

இந்தநாடு தற்போது எற்பேர்ப்பட்ட ஊழலில் சிக்கி தவித்துக்கொண்டிருக்கிறது என்பது உங்கள் எல்லோருக்கும் தெரிந்த விடயம். அதிலிருந்து தாய்நாட்டை மீட்டெடுப்பதற்கு முன்னிற்கும் எவருக்கும் நான் பக்கபலமாக நின்று உழைப்பேன் என்று கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## புலிகளை வெள்...

அவர்களை வெள்ளைக் கொடிகளை ஏந்தியவாறு வருமாறு கோஹன தெரிவித்தார். கடந்த மாதம் 21ஆம் திகதி பிரான்ஸ் நாட்டு ஏ.எப்.பி ஊடகத்திற்கு வழங்கிய நேர்காணலில் வெள்ளைக் கொடிகளுடன் விடுதலைப் புலிகளை சரணடையுமாறு தான் கூறியதாக அவர் தெரிவித்தார். ஆனால் சரணடைய முயன்றவர்களை விடுதலைப் புலிகள் பின்னால் இருந்து சுட்டுவிட்டதாக அவர் மேலும் தெரிவித்திருந்தார். ஆனால் கோஹனவின் இந்த குற்றச்சாட்டை மறுத்துள்ள இராஜதந்திர வட்டாரங்கள் அரசு ஜெனீவா சட்டவிதிகளை மிகவும் பாரதூரமாக மீறியுள்ளதாக தெரிவித் துள்ளன.

இதனிடையே அரசின் அறிவுறுத்தல் களுக்கு அமைவாக நடேசனும், புலிதேவனும் வெள்ளைக் கொடிகளுடன் 58ஆவது படையணியினரை நோக்கிச் சென்ற போது அவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டதாக விடுதலைப்புலிகளின் அனைத்துலக விவகா ரங்களுக்கான பிரதிநிதி செல்வராசா பத்மநாதன் முன்னர் தெரிவித்திருந்தமை குறிப் பிடத்தக்கது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## முடிபுகள் எதுவுமின்றி நிறைவுபெறும்...

நாடாளுமன்றக் கட்டிடத் தொகுதியில் நேற்று காலை 10.30 முதல் 3.00மணி வரை கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் எதிர் வரும் 4ஆம் திகதி மீண்டும் கூடி ஆராய்ந்து முடிபை அறிவிப்பது என்றும் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன், ப.அரியநேத்திரன், கே.துரைரட்ணசிங்கம், பத்மினி சிதம்பரநாதன், சொலமன் சிறில், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கஜேந்திரன், ஐ.எம்.இமாம், விநோதராதலிங்கம், சிவசக்தி ஆனந்தன் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம் (தற்போது லண்டனில்), எஸ்.ஜெயானந்தமூர்த்தி (தொடர்ந்தும் லண்டனில்), சதாசிவம் கனகரத்தினம் (தடுப்புக் காவலில்), ரி.கனகசபை (தற்போது இந்தியா), என். ஸ்ரீகாந்தா, செல்வம் அடைக் கலநாதன், கிஷோர் சிவநாதன், தங்கேஸ்வரி கதிர்காமர், சந்திரநேரு சந்திரகாந்தன் மற்றும் டாக்டர் தோமஸ் வில்லியம் தங்கத்துரை ஆகியோர் கலந்து கொள்ளவில்லை.

ஜனாதிபதித் தேர்தலில் எடுக்க வேண்டிய நிலைப்பாடு தொடர்பாக இக்கூட்டத்தில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் களினால் பல்வேறு கருத்துக்கள் முன் வைக்கப்பட்டன.

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் ஏற்கனவே எடுத்த தீர்மானத்தை மீறும் வகையில் இத்தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாக அவரது கட்சியான ரெலோவிடம் அது பற்றிய விளக்கத்தைக் கோருவது என்றும் அதன் பின்னரே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது முடிபை அறிவிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

எதிர்வரும் 12ஆம் திகதி தபால் மூல வாக்களிப்பு நடைபெறவிருப்பதால் அதற்கு முன்னதாக முடிபு எடுக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் இக்கூட்டத்தில் சுட்டிக் காட்டினார். இதனை சக நாடாளுமன்ற உறுப்பினர் களும் ஏற்றுக்கொண்ட நிலையில் எதிர்வரும் 4ஆம் திகதி மீண்டும் கூடி ஆராய்வது எனத் தீர்மானிக்கப்பட்டது.

எதிர்வரும் ஜனவரி மாதம் 26ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகள் சூடு பிடிக்க ஆரம்பித்துள்ள நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமது நிலைப்பாட்டை இன்னமும் வெளியிடாமலே இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## காணாமல்...

சந்திரகாந்தன் சதீஸ் (வயது 17) என்ற இந்த இளைஞன் மல்லாகம் கோணப்பலம் நலன் புரி குடியிருப்புத் தொகுதியில் தனது பெற்றோருடன் தங்கியிருந்த நிலையிலேயே கடந்த 4 நாட் களுக்கு முன்னர் காணாமல் போயிருந்த தாக கூறப்பட்டது.

குறிப்பிட்ட இடத்துக்குச் சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டதுடன் மல்லாக மாவட்ட நீதிமன்ற நீதிபதியின் மரணவிசாரணையை தொடர்ந்து சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. (ச-5)

## நடந்தது என்ன...

விளக்கமளிக்கவுள்ளார்.

முன்னாள் இராணுவத் தளபதியின் குற்றச்சாட்டினை அடுத்து சரணடைந்த விடுதலைப்புலிகளின் தலைவர்களுக்கு என்ன நடந்தது என்று விளக்கமளிக்குமாறு ஐக்கிய நாடுகள் சபை அரசுக்கு கடிதம் அனுப்பியிருந்தது.

இதனையடுத்து அரச தரப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள உடனடி நடவடிக்கையாக இன்று ஜனாதிபதி மகிந்த நாட்டுமக்களுக்கு விளக்கமளிக்கும் ஒழுங்கினை ஏற்பாடு செய்துள்ளார். இன்று இரவு ரூபவாகினியில் ஜனாதிபதி மகிந்தவின் விளக்க உரை இடம் பெறும் என தெரிவிக்கப்பட்டது. (ச-5)

NEW SCIENCE HALL
கன்னாதிட்டி ⟷ யாழ்ப்பாணம்
2012 A/L
❖கணித, உயிரியல் பிரிவு❖
எமது வழமையான ஆசிரியர் குழு
ஆரம்பம்:- 28.12.2009 திங்கள் காலை 9.30
(C-4027)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.12.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.